# ஜமாஅத் பொறுப்பாளர்களின் பொறுப்புகள்

வெளியீடு
நஸாரத் உல்யா
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான்
2019

# UHDEDARAN-E-JAMA'AT KI ZIMMADARIYAN

(in Tamil)

BY
NAZARAT ULIA
SADR ANJUMAN AHMADIYYA QADIAN

# ஜமாஅத் பொறுப்பாளர்களின் பொறுப்புகள்

வெளியிடுவோர்:
நஸாரத் உல்யா சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா
காதியான்
2019

Tamil Translation of the Book

# Uhdedaran-e-Jama'at ki Zimmadariyan

# ஜமாஅத் பொறுப்பாளர்களின் பொறுப்புகள்

| | |
|---|---|
| **Name of the Book** | **: Uhdedaran-e-Jama'at ki Zimmadariyan** |
| **Translated by** | **: O.M. Muzzammil Ahmad H.A.** |
| **Compiled by** | **: Nazarat ulya, Sadr Anjuman Ahmadiyya,Qadian** |
| **First Edition** | **: 2019** |
| **Copies** | **: 500** |
| **Printed at** | **: Fazl-e-Umar Printing Press Gurdaspur, Qadian-143 516 Punjab** |

# முன்னுரை

ஜமாஅத் தலைவர்கள், அமீர்மார்கள், செயலர்கள் ஆகியோரின் வழிகாட்டலுக்காக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் கடமைகள் தொடர்பாக முக்கியமான விபரங்களும் சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் சில வழிகாட்டல்களும் இச்சிறு நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பொறுப்பாளர்களின் தேர்தலுக்கான விதிமுறைகள் தனியாக சிறுநூலில் வெளியிடப்பட்டுள்ளது.

அல்லாஹ் ஜமாஅத்தின் எல்லா பொறுப்பாளர்களுக்கும் ஹுஸூர் அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் உயர்ந்த எதிர்பார்ப்புகளுக்கேற்ப தொண்டுகளை செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

**நாஸிர் அஃலா**
**காதியான்**

# அறிமுகம்

கிலாஃபத் அமைப்பு மனித குலத்திற்கு ஒரு மிகப் பெரிய சொத்தாகும். அதிலிருந்து பயன்பெற்றவாறு இந்த பௌதீக உலகில் சிந்தித்து கூட பார்க்க முடியாத, கிடைப்பதற்கரிய கருவூலத்தால் மனிதன் அருள் பெறலாம். இது எத்தகைய கேடயம் என்றால், இதன் நிழலின் கீழ் மனிதன் ஆன்மீக வாழ்வின் குறிக்கோளாக இருக்கும் உயர்வுகள் வரை அடைய முடியும்.

இக்காலத்தில் இந்த மகத்தான நற்பேறு இறைவனால் இக்காலத்தில் நியமிக்கப்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் நிலைநாட்டப்பட்ட ஜமாஅத்திற்குக் கிடைத்திருக்கிறது. அல்லாஹ் இந்த ஜமாஅத்திற்கு கிலாஃபத்தின் அமைப்பை வழங்கியிருக்கிறான். மேலும் தனிப்பட்ட மற்றும் ஒட்டுமொத்தமான முன்னேற்றங்களும் வெற்றிகளும் இந்த கிலாஃபத்தின் வழிகாட்டலையே சார்ந்திருக்கின்றன.

இந்த கிலாஃபத் அமைப்பின் அருளினால் ஜமாஅத் உறுப்பினர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும், ஜமாஅத் சகோதரர்கள் அனைவரையும் ஒரே சரடில் கோர்த்து வைத்திருப்பதற்கும் எத்தகைய தலையாய அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது என்றால், அது ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும், முதியோருக்கும் இளைஞருக்கும் உலக மற்றும் ஆன்மீக முன்னேற்றங்களுக்கு உத்தரவாதமாகும். இந்த அமைப்பு ‘நிஸாமே ஜமாஅத்’ (ஜமாஅத் அமைப்பு) என்று அழைக்கப்படுகிறது.

ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத் அமைப்பு இரண்டும் செயல் அளவில் ஒன்றே ஆகும். மேலும் ஒன்றின் உறுதியும் நிலைப்பாட்டும் இன்னொன்றின் உறுதிக்கும் நிலைப்பாட்டிற்கும் அடிப்படை பங்கு வகிக்கிறது.

ஜமாஅத்தின் அமைப்பைப் பற்றி நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத் நுபுவ்வத் வழியில் நிலைநாட்டப்பட்டுள்ளது. எனவே அடிப்படையில் ஒவ்வோர் இறையியக்கத்திற்கும்

இருக்கும் அதே அமைப்புதான் இதற்கும் இருக்கிறது. அந்த அமைப்பு என்பது இறைவன் ஒரு நபியின் மூலமாக ஒரு ஜமாஅத்திற்கான அடிக்கல்லை நாட்டும்போது அதற்குப் பிறகு அந்த நபியைப் பின்பற்றுபவர்களிலிருந்து அவருடைய கலீஃபாக்களை நியமித்து, அந்த ஜமாஅத்திற்கு முன்னேற்றத்தை வழங்குகிறான் என்பதே ஆகும். மேலும் அந்த கலீஃபாக்களுக்கு எல்லா முக்கியமான விஷயங்களிலும் ஜமாஅத்திடம் ஆலோசனை பெறுமாறு கட்டளையிடுகிறான். ஆனால் அவர்களுடைய அசல் ஆதரவு இறைவனின் உதவியில் இருக்கிறது. எனவே அவர்கள் அந்த ஆலோசனைகளுக்கு கட்டுப்பட வேண்டியவர்கள் அல்ல. மாறாக, அல்லாஹ்வின் வழிகாட்டல், ஆதரவு, உதவி ஆகியவற்றால் ஜமாஅத் அமைப்பை வழிநடத்துகின்றார்கள்.

எனவே கண்ணியத்திற்குரிய கலீஃபாக்கள் ஜமாஅத்தின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல. ஆனால் அவர்களின் கட்டளையின்படி செயல்படுவது ஜமாஅத்திற்குக் கட்டாயமானதாகும். எனவே சுருக்கமாக இதுதான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைப்பாகும்.மேலும் நமது அமைப்பின் நிரந்தரமான பகுதி இந்த எல்லைக்குட்பட்டதாகவே இருக்கிறது. அதை விட அதிகமாக ஒன்றும் இல்லை. ஆனால் ஒவ்வோர் இயக்கமும் விரிவாக செயல்படுவதில் தத்தமது தனித்தனியான வழியை நிலைநாட்டிக் கொள்வதைப் போன்றே அஹ்மதிய்யா ஜமாஅத்திலும் சில விபரமான விவகாரங்களில் சில வழிமுறைகள் நிலைபெற்றுள்ளன. மேலும் அவற்றையும் சேர்த்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தற்போதைய அமைப்பு கீழ்வரும் வடிவத்தில் கருதப்படுகிறது:

1. முதலில் காலத்தின் கலீஃபா ஜமாஅத் அமைப்பின் நிரந்தரமான, தலையாய மையப் புள்ளியாவார். அவர் இஸ்லாமிய ஷரீஅத் மற்றும் தனது எஜமானரின் வழிகாட்டல்களுக்கு எதிராக எந்த கட்டளையையும் இட முடியாது என்ற நிபந்தனையுடன் அவருக்கு முழுமையான அதிகாரங்கள்இருக்கின்றன.(அவ்வாறுஇறைவேதத்திற்கு, இறைதூதரின் கூற்றுக்கு எதிரான கட்டளையை இடுவது எங்கிருந்து சாத்தியம்?)

2. இரண்டாவது சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ஆகும். இது ஜமாஅத்தின் பணிகளை செய்வதற்காக காலத்தின் கலீஃபாவின் கீழ் இயங்குகின்ற ஒரு மேலிட மற்றும் கட்டமைக்கப்பட்ட அஞ்சுமன் ஆகும். இதன் உறுப்பினர்கள்பல்வேறு நஸாரத்துகளின்பொறுப்பாளர்கள் ஆவர். அவர்கள் நாஸிர் என அழைக்கப்படுகின்றனர். ஆனால் எவரிடம் எந்த அலுவலகத்தின் பொறுப்பும் இல்லையோ அந்த உறுப்பினரும் காலத்தின் கலீஃபாவின் கட்டளையினால் நியமிக்கப்படலாம்.

3. மூன்றாவது மஜ்லிஸே முஷாவரத் (ஆலோசனைக் கூட்டம்) ஆகும். இது சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவுடன் ஒப்பிடுகையில் அதற்கு நிகரான ஓர் ஆலோசனை அஞ்சுமன் ஆகும். இந்த மஜ்லிஸ் பொதுவாக ஆண்டில் ஒருமுறை கூட்டம் நடத்தலாம். இந்த மஜ்லிஸ் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் கீழ் இல்லை. மாறாக, சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காலத்தின் கலீஃபாவுடன் நேரடியாக தொடர்பு கொண்டிருப்பதைப் போன்றே இதுவும் நேரடியாக தொடர்பு கொண்டிருக்கிறது. ஆக, சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ஒரு கட்டமைப்பான அஞ்சுமன் ஆகும். மேலும் மஜ்லிஸே முஷாவரத் (ஆலோசனைக் கூட்டம்) முக்கியமான நாடுதழுவிய அளவிலான விவகாரங்களில் ஆலோசனை பெறுவதற்காக நிலைபெற்றுள்ளது.

4. நான்காவது, உள்ளூர் அஞ்சுமன்கள் ஆகும். இவை ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் இருக்கின்றன.(சில நேரங்களில் மாவட்ட அளவில், மாநில அளவில், நாடுதழுவிய அளவிலும் அஞ்சுமன்கள் இருக்கின்றன). அஹ்மதிகள் இருக்கின்ற இடங்களில் தத்தமது எல்லைக்குட்பட்ட வட்டத்தில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவிற்கான கடமைகளை இவை செய்கின்றன. ஆனால் அவை தத்தமது வட்டத்திலிருந்து மஜ்லிஸே முஷாவரத்திற்காக (ஆலோசனைக் கூட்டத்திற்காக) பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதும் இதன் பணியாகும். *(சில்சிலா அஹ்மதிய்யா என்ற நூலிலிருந்து சுருக்கமாக எடுக்கப்பட்டது. பக்கம்: 429 - 431)*

எப்படியிருந்த போதிலும் இறைவனுடைய வாக்குறுதிகளுக்கேற்ப ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இந்த அமைப்பு

கிலாஃபத் அமைப்புடன் நிலைபெற வேண்டும். மேலும் இப்போது இது அல்லாஹ்வின் அருளால் உறுதியான அடிப்படையில் நிலைநாட்டப்பட்டு விட்டது. உலகத்தில் மூலை முடுக்குகளில் பரவிக்கொண்டே செல்கின்றது - அல்ஹம்து லில்லாஹ்.

✸✸✸ ✸✸✸ ✸✸✸

# பொறுப்புகளின் முக்கியத்துவம்

(திருக்குர்ஆன், ஹதீஸின் ஒளியில்)

அல்லாஹ் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் அமானிதத்தைக் காப்பது பற்றி வலியுறுத்திக் கூறியிருக்கிறான். அல்லாஹ்வின் கட்டளை இதுவாகும்:

فَلْيُؤَدِّ الَّذِى اؤْتُمِنَ اَمَانَتَهٗ وَلْيَتَّقِ اللّٰهَ رَبَّهٗ

பொருள்:எவரிடம்நம்பிஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அவர் அதன் உரிமையை நிறைவேற்ற வேண்டும். மேலும் அவர் தனது இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ள வேண்டும். (*திருக்குர்ஆன் 2:284*)

மேலும் இறையச்சத்தின்படி நடப்பவர்களின் அடையாளமாக,

وَالْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا

எனக் குறிப்பிட்டுள்ளது. அதாவது, அவர்கள் வாக்குறுதி அளித்தால் அவர்கள் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களாவர். (*திருக்குர்ஆன் 2:178*)

பிறகு இவ்வாறு கூறுகிறது:

اِنَّ الْعَهْدَ كَانَ مَسْـُٔوْلًا

ஒவ்வொரு வாக்குறுதியைப் பற்றியும் கேள்வி கணக்கு கேட்கப்படும். (*திருக்குர்ஆன் 17:35*)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், நம்பி ஒப்படைக்கப்படுபவற்றை நிறைவேற்றுவதைப் பற்றி மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எவரிடம் அமானிதத்தை பாதுகாக்கும் பண்பு இல்லையோஅவரிடம்ஈமான்இல்லை.எவர்வாக்குறுதியை பேணுவதில்லையோ அவருடைய மார்க்கத்திற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. (*மிஷ்காத், கிதாபுல் ஈமான்*)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் எவரை ஒரு கூட்டத்திற்கு கண்காணிப்பாளராக ஆக்குகின்றானோ அந்த கூட்டம் சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் அல்லாஹ் அவரிடம் அவருடைய பொறுப்பில் உள்ளவர்களைப் பற்றி, அவர் அவர்கள் மத்தியில் அல்லாஹ்வின் கட்டளையை நிலைநாட்டினாரா என்று மறுமை நாளில் கண்டிப்பாக கேள்வி கேட்பான். எதுவரை என்றால் குறிப்பாக அவரது வீட்டினர்களைப் பற்றியும் கேள்வி கேட்பான். (*முஸ்னது அஹ்மது*)

ஹஸ்ரத் மஃகல் பின் யஸார் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன்: எந்த அமீர் முஸ்லிம்களின் விவகாரங்களுக்கு பொறுப்பாளியாகி முஸ்லிம்களின் நன்மைகளுக்காக முயற்சி செய்வதில்லையோ அவர் முஸ்லிம்களுடன் சேர்ந்து சுவர்க்கத்தில் நுழைய முடியாது. *(முஸ்லிம்)*

ஹஸ்ரத் மஃகல் பின் யஸார் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் ஒரு முஸ்லிமுக்கு காப்பாளராக பொறுப்பேற்றிருக்கும்போது அவருடன் ஏமாற்றுதலோடு நடந்து கொள்வாரோ அந்த நிலையிலேயே அவருக்கு மரணம் வந்தால் அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தை தடை செய்து விடுவான். *(புகாரி)*

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பொறுப்பாளர்களுக்கு தமது பொறுப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

‘‘ஜமாஅத்தின் பொறுப்பை சாதாரண தொண்டாகக் கருதிக் கொள்ளக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதை மேலோட்டமாகக் கொள்ளக் கூடாது. நம்மில் ஒவ்வொருவரும் - அவர் பொறுப்பாளராக இருந்தாலும் ஒரு சாதாரண அஹ்மதியாக இருந்தாலும் - அவர்,நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என உறுதிமொழி எடுத்துள்ளார். **ஒருவர் மார்க்க தொண்டிற்காக அல்லது**

**பொறுப்பாளர் என்ற முறையில் ஏதாவது தொண்டினை செய்வதற்கு ஒப்புக் கொள்கிறார் என்றால் அல்லது அந்த தொண்டிற்காக நியமிக்கப்படுகிறார் என்றால் அவர் தனது உடன்படிக்கையை மற்றவர்களை விட அதிகமாக நிறைவேற்றுவது அவர் மீது பொறுப்பு ஆகும். மேலும் இந்த உடன்படிக்கையை அவர் அல்லாஹ்விடம் செய்துள்ளார் என்பதை நினைவில் கொள்ளட்டும்.** மேலும் உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறான்.

எனவே நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்கள் உங்களுடைய உடன்படிக்கைகளாகும் என அல்லாஹ் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளான் என்பதை எப்போதும் நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். எனவே உங்கள் அமானிதங்களையும், உங்கள் உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுங்கள். தனது கூற்றுக்கேற்ப உண்மையாகவும் இறையச்சத்துடனும் செல்பவர்களின் அடையாளமாக அல்லாஹ் ஓரிடத்தில்,

وَ الْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا

அவர்கள் தமது உடன்படிக்கைகளை நிறைவேற்றுபவர்களாவர் எனக் குறிப்பிட்டுள்ளான். (திருக்குர்ஆன் 2:178 காண்க) ........எனவே பணிபுரிகின்றவர்கள் முதலில் தம்மைப் பற்றி, எந்த அளவுக்கு தமது சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கின்றன என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.'' *(ஜுமுஆ பேருரை 15.07.2016)*

## பொறுப்பாளர்களுக்கான தேர்தல்

பொறுப்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்கும், தேர்தலுக்கும் திருக்குர்ஆன் ஓர் அடிப்படையான வழிகாட்டுதலை இவ்வாறு வழங்கியுள்ளது:

إِنَّ اللّٰهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمٰنٰتِ إِلٰى أَهْلِهَا

அதாவது, நீங்கள் அமானிதங்களை அதற்கு உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். *(திருக்குர்ஆன் 4:59)*

இங்கு அமானிதம் என்பதன் கருத்து தேர்தலுக்கான உரிமை என்பதாகும். எனவே வாக்குரிமையும் ஓர் அமானிதமாகும். அதற்கு உரிமை பெற்றவருக்கே அதைக் கொடுக்க வேண்டும்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஜமாஅத் சகோதரர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

எனவே வாக்களிக்கின்ற ஒவ்வொரு வாக்காளர்களும் தனது வாக்குரிமையின், தனது கருத்தை தெரிவிக்கும் உரிமையின் முக்கியத்துவத்தைப் புரிய வேண்டும். ஒவ்வொரு சொந்த சிந்தனைகள் அல்லது சொந்த விருப்பங்கள், சொந்த தொடர்புகள் ஆகியவற்றிக்கு அப்பாற்பட்டு எந்த பணிக்காக ஒருவரை தேர்ந்தெடுக்க விரும்புகிறீர்களோ அவருக்கு உங்களின் கருத்தை வழங்குங்கள். தேர்தல்களில் கருத்து தெரிவிக்கப்படுகிறது; உறுதியான தீர்ப்பு காலத்தின் கலீஃபாவிடமிருந்து வருகிறது என்பதை பழைய அஹ்மதிகள் அறிவார்கள். இது புதிதாக வருபவர்களுக்கும் தெளிவாக வேண்டும்; இளைஞர்களுக்கும் தெளிவாக வேண்டும். சில இடங்களில் ஒருவருக்கு பெரும்பான்மை இருந்தும் சில காரணங்களினால் இன்னொருவர் பொறுப்பாளர் ஆக்கப்படுகிறார். சில உள்ளூர் பொறுப்பாளர்களின் தேர்தல்களுக்கான உறுதியான ஒப்புதல் நாடு தழுவிய அமீர் கொடுக்கின்றார் என்றால் விதிமுறைகள்

அதற்கான அனுமதியை அவருக்கு அளிக்கின்றன. பெரும்பான்மையான கருத்துக்கு மாறுபட்ட கருத்து கொள்ள அவருக்கு உரிமை உண்டு. ஆயினும் (நாடு தழுவிய) அமீர்மார்கள் பெரும்பான்மை கருத்துக்கு பொதுவாக கண்ணியமளிக்க வேண்டும்.'' *(ஜுமுஆ பேருரை 12.04.2013)*

*** *** ***

# மஜ்லிஸே முஷாவரத்

மஜ்லிஸே முஷாவரத்திற்கான பிரதிநிதிக்காக கீழ்வரும் விஷயங்கள் அவசியமானவையாகும்:

1. தேர்ந்தெடுக்கப்படுபவர் கலப்பற்றவராகவும், பைஅத் செய்தவராகவும், கருத்து கூறும் தகுதி பெற்றவராகவும் இருக்க வேண்டும். ஜமாஅத்தின் சார்பாக தண்டனையின் கீழ் இருப்பவராகவும் இருக்கக் கூடாது.

2. இஸ்லாத்தின் ஒழுங்குமுறைகளை பேணுபவராக இருக்க வேண்டும். அதாவது தாடியும் வைத்திருக்க வேண்டும்.

3. பணிபுரிபவராக இருந்து வருவாய் இருக்கும் நிலையில் கட்டாயச் சந்தாவை நிறைவேற்றுபவராக இருக்க வேண்டும். பாக்கி வைத்திருக்கக் கூடாது.

4. ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் முஷாவரத்தில் பிரதிநிதியாக கலந்து கொள்பவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் 30 வயதை விட குறைவானவர்களாக இருக்க வேண்டும்.

✸ மஜ்லிஸே முஷாவரத்தின் பிரதிநிதித்துவம் அடுத்த ஆண்டு நடைபெறும் மஜ்லிஸே முஷாவரத்தின் கூட்டம் வரை நிலைபெறுகிறது.

✸ மஜ்லிஸே முஷாவரத்தின் பணி, காலத்தின் கலீஃபா அவர்கள் ஆலோசனை கேட்கும் விஷயங்களில் ஆலோசனை வழங்குவதாகும். எந்த ஓர் ஆலோசனையையும் காலத்தின் கலீஃபா அவர்கள் ஒப்புதல் அளித்து அதை நிலைநாட்டாதவரை அது செயல்படுவதற்கு கட்டாயமானதல்ல.

✸ எந்த பிரதிநிதி ஏதாவதொரு நியாயமான காரணமின்றி அல்லது கட்டாயமான சூழ்நிலையின்றி மஜ்லிஸே ஷூராவின் கூட்டத்தில் அல்லது துணைக் குழுவில் கலந்து கொள்ளவில்லையோ அவரது பெயர் மஜ்லிஸே முஷாவரத்தில் எடுத்து வைக்கப்படும். அதற்குப் பிறகும் இது தொடர்ந்தால் அப்படிப்பட்ட நபர் 3 ஆண்டுகள் வரை மஜ்லிஸே முஷாவரத்தின் பிரதிநிதியாகும் உரிமையிலிருந்து விலக்கி வைக்கப்படுவார்.

✸ ஓர் உள்ளூர் அஞ்சுமன் சார்பாக மஜ்லிஸே ஷூராவில் வந்திருக்கும் ஆலோசனைகள் ஒப்புதல் ஆகாவிட்டால் அவற்றை படித்துக் காட்டினால் போதும். சில நேரங்களில் படித்துக் கூட காட்டப்படுவதில்லை. அது பற்றி எவருக்கும் எந்த விவாதமும் செய்ய அனுமதியில்லை.

✸ உள்ளூர் அஞ்சுமனின் எந்தவொரு நபரும் தன் சார்பாக எந்தவொரு ஆலோசனையையும் மஜ்லிஸே முஷாவரத்திற்கு நேரடியாக அனுப்புவதற்கு அதிகாரமில்லை. மாறாக, அவர் தனது ஆலோசனையை உள்ளூர் அஞ்சுமனில் எடுத்து வைப்பார். உள்ளூர் அஞ்சுமனின் பெரும்பான்மை அதை மஜ்லிஸே முஷாவரத்தில் எடுத்து வைப்பதற்கு சாதகமாக இருந்தால் உள்ளூர் தலைவர் அல்லது அமீர் அதை மஜ்லிஸே முஷாவரத்தின் செயலருக்கு அனுப்பி வைப்பார்.

✸ எந்த ஆலோசனை ஒருமுறை மஜ்லிஸே முஷாவரத்தில் எடுத்து வைக்கப்பட்டு தீர்ப்பாகி விட்டதோ அது மூன்று ஆண்டுகள் வரை மீண்டும் மஜ்லிஸே முஷாவரத்தில் எடுத்து வைக்கப்பட மாட்டாது.

✸ மஜ்லிஸே முஷாவரத் கூட்டத்தில் ஒவ்வோர் ஆலோசனை அல்லது ஏதாவது ஆலோசனையின் திருத்தம் ஆகியவற்றை எழுத்துப்பூர்வமாக கொடுக்க வேண்டும். வாய்மொழியாகக் கூறும் திருத்தம் ஒப்புக் கொள்ளப்படத்தக்கதன்று.

# பட்ஜெட் கமிட்டி

## (நிதி அறிக்கைக் குழு)

✸ ஒவ்வோர் உள்ளூர் ஜமாஅத்திலும் ஒரு பட்ஜெட் கமிட்டி (நிதி அறிக்கைக் குழு) இருக்கும். அதன் தலைவராக பொருளாளரும் இன்னும் இரண்டு உறுப்பினர்களும் இருப்பார்கள். அந்த இரு உறுப்பினர்களை செயற்குழு தேர்ந்தெடுக்கும்.

✸ நிதி அறிக்கையைப் பற்றி ஆய்வு செய்வது குழுவின் பொறுப்பாகும். எந்த சகோதரர்களின் வருவாய் குறைவாக எழுதப்பட்டிருப்பதாக உணர்கின்றீர்களோ அவர்களுக்கு கவனமூட்டுவதற்காக செயல்முறைத் திட்டத்தை உருவாக்குங்கள். அதற்கேற்ப செயல்படுவதற்கான நடவடிக்கையை எடுங்கள்.

✸ ஜமாஅத்தின் உள்ளூர் சந்தா பட்ஜெட், ஆண்டு வரவு செலவு ஆகியவற்றை ஆயத்தம் செய்து செயற்குழுவில் எடுத்து வைக்கும் பணி இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பெரிய ஜமாஅத்துகள் இந்த குறிக்கோளுக்காக இந்தக் குழுவின் உறுப்பினர்களை அதிகமாக்கவும் செய்யலாம்.

✸ எல்லா பொருளாதார விவகாரங்களும் இந்தக் குழுவின் கருத்துடன் செயற்குழுவில் எடுத்து வைப்பது பொருத்தமானதாகும்.

✸ செலவுகளை கண்காணிப்பது, நிதி நிலைமையை கவனத்தில் கொண்டவாறு குறித்த நேரத்தில் அது பற்றி அறிவிப்பது இந்தக் குழுவின் பணியாகும்.

✸ வரவு, செலவு கணக்கு வைப்பதற்காக மேலிடம் நியமித்துள்ள வழிமுறையை பேண வைப்பதும் அது அல்லாமல் வேறு ஒரு வழிமுறையை மேற்கொள்ள வேண்டியது வந்தால் அது தொடர்பாக ஆலோசனை வழங்கி மேலிடத்திலிருந்து ஒப்புதல் பெறுவதும் ஆகும்.

✸ இந்த குழுவுக்கு ஆலோசனை கேட்கும் எல்லா விஷயங்களிலும் சந்தா மற்றும் கணக்கு ஆகியவற்றை கருத்தில் கொண்டு கருத்து கூற அதிகாரம் உண்டு. உள் ஏற்பாட்டு அம்சத்தில் தலையிட முடியாது.

✸ ஜமாஅத்தின் பயனுக்காக கருத்து கூறுவது பொருத்தமாக இருக்கும் என்ற அளவிலான ஏதாவது கணக்கு, சந்தா விவகாரம் அந்தக் குழுவின் கவனத்திற்கு வந்தால் அது குறித்த தனது கருத்தை தானாகவே அமீர் அல்லது தலைவரின் மூலமாக செயற்குழுவில் எடுத்துரைக்கலாம்.

✸✸✸ ✸✸✸ ✸✸✸

# அமீர்மார்கள்/சத்ர்மார்கள், ஜமாஅத் பொறுப்பாளர்கள் ஆகியோரின் கடமைகள்

அமீர்மார்களுக்கு இரண்டு Categories உருவாக்கப்பட்டுள்ளன. ஒன்று, மாவட்ட அளவிலானது. இன்னொன்று, உள்ளூர் அளவிலானது. மாவட்ட அமீர் மாவட்டத்தின் அனைத்து ஜமாஅத்துகளின் பொறுப்பாளரும் கண்காணிப்பாளரும் ஆக இருக்கும் உயர்ந்த மேலதிகாரி ஆவார். இவ்வாறே உள்ளூர் அமீர் உள்ளூர் ஜமாஅத்தின் பொறுப்பாளரும் கண்காணிப்பாளரும் ஆவார். இருவரும் ஹுஸூர் அவர்களின் ஒப்புதலுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் அல்லது நியமிக்கப்படுகின்றனர்.

தலைவர்கள் மேலிடத்திலிருந்து தமது உள்ளூர் ஜமாஅத்தின் அனைத்து விஷயங்களின் பொறுப்பிற்கும் கண்காணிப்பிற்கும் நியமிக்கப்படுகின்றனர். ஜமாஅத்தின் தலைவர்கள்ஹுஸூர்அவர்களின்சார்பாகநியமிக்கப்பட்ட 'மர்கஸி இன்திகாபீ கமிட்டி' (மேலிட தேர்ந்தெடுப்புக் குழு)-ன் ஒப்புதலுடன் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் அல்லது நியமிக்கப்படுகின்றனர்.

**அமீர்மார்கள் மற்றும் தலைவர்கள் ஆகியோருக்கு கவனமூட்டியவாறு ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:**

''ஜமாஅத் தலைவர்கள் அல்லது அமீர்மார்கள் உள்ளூர் தலைவராக இருப்பதன் காரணத்தால் ஜமாஅத்தின் உள்ளூர் அமைப்பை சரியான முறையில் நடத்த வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது.மேலும் காலத்தின் கலீஃபா இந்த வேலையில் அவர்களை தமது பிரதிநிதியாக ஆக்கியிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவ்வாறே ஜமாஅத்தின் மார்க்க, ஆன்மீக மேம்பாடு முன்னேற்றம் ஆகியவற்றிற்க்காக இயன்ற வழிவகைகளை பயன்படுத்த வேண்டிய பொறுப்பு கொள்கை பரப்புநர்களுக்கு இருக்கிறது. மேலும் அவர்கள் இந்த விஷயத்தில் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதியாவார்கள்.

எனவே (உள்ளூர் மற்றும் மாநில) இரு அமீர்மார்களுக்கும், தலைவர்களுக்கும், கொள்கை பரப்புநர்களுக்கும் இடையில் ஒருவருக்கொருவர்

ஒத்துழைப்பு இருக்க வேண்டும். ஒரு திட்டத்துடன் வேலை செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்கள் ஜமாஅத்தை அமைப்பு அளவில் உறுதிப்படுத்த முடியும். மேலும் ஆன்மீகத்தின், அறிவின் தகுதியையும் முன்னேற்றமடையச் செய்து கொண்டிருப்பவர்களாக முடியும்.'' *(ஜுமுஆ பேருரை 10.03.2017)*

''**அமீரின் வேலை, அவருக்கு எதிராக முறையீடு இருந்தாலும் அதை அவர் எடுத்து வைக்க வேண்டும்.** ஏதாவது தெளிவுபடுத்த வேண்டுமென்றால் தெளிவுபடுத்தலாம். இதனால் அதிகமான கடிதப் போக்குவரத்தினால் நேரம் வீணாகாமல் இருக்கும்.'' *(ஜுமுஆ பேருரை 31.12.2004)*

**துணை அமீர் மற்றும் துணைத் தலைவர்**

துணைஅமீர்மற்றும்துணைத்தலைவர்ஆகியோர்அமீர் மற்றும் தலைவர் ஆகியோரின் அனைத்து பணிகளிலும் எளிமையை ஏற்படுத்துவதற்காக உதவியாளராக இருக்கின்றனர். அமீர், தலைவர் இல்லாத நேரத்தில் முழுப் பொறுப்புடன் அனைத்து விஷயங்களிலும் பணி செய்வதற்காக அவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்.

**பொதுச் செயலர்**

எந்த பெரிய ஜமாஅத்துகளில் துணை அமீர் அல்லது துணைத் தலைவர் இருந்தும் பொதுச் செயலருக்கான தேவை இருக்கிறதோ அங்கு பொதுச் செயலருக்கான பதவி நிலைநாட்டப் படலாம். அவர்களின் பணியும் அமீர் மற்றும் தலைவருடன் அனைத்து விஷயங்களிலும் ஒத்துழைப்பு நல்குவதேயாகும். அவர்களின் பொறுப்பு அந்த எல்லைக்குட்பட்டதேயாகும்.

**பொதுச் செயலரின் கடமை** என்னவெனில், அவர் உள்ளூர் அளவில், ஹல்கா (வட்ட) அளவில் (எந்த நிலை இருந்தாலும்) விதிமுறைகளுக்கேற்ப பொறுப்பாளர்களுக்கான தேர்தலை நடத்த வேண்டும். அமீர் அல்லது ஜமாஅத் தலைவரின் ஒப்புதலுடன் செயற்குழுவிற்கான கூட்டத்தை கூட்ட வேண்டும். செயற்குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கு அந்த கூட்டத்தைப் பற்றி தகவல் தெரிவிக்க வேண்டும். செயற்குழுக் கூட்டத்திற்கான பொருள் நிரலை (Agenta) ஆயத்தம் செய்து செயற்குழுவில் எடுத்து வைப்பது, செயற்குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகளை பதிவேட்டில்

பதிவது, செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை சம்பந்தப்பட்ட செயலர்கள் வரை எட்டச் செய்து அதன்படி செயல்பட்ட அறிக்கையைப் பெறுவது, தீர்மானங்கள் செயல்படாதபோது அல்லது குறைகள் இருக்கும்போது நினைவூட்டுவது, ஜமாஅத் அமீர் மற்றும் தலைவருக்கு அறிக்கை கொடுப்பது, தேவையின்போது உள்ளூர் ஜமாஅத்திற்காக நிரந்தமான அல்லது தற்காலிகமான பணியாளர் தேவைப்பட்டால் அந்தத் தேவையை நிறைவேற்றுவது, தனது மற்றும் பிற பொறுப்பாளர்களின் மாதாந்திர அறிக்கையை அமீர் அல்லது தலைவர் மூலமாக செயற்குழுவில் எடுத்து வைப்பது ஆகியவை ஆகும்.

ஒரு பொறுப்பாளர் அல்லது ஜமாஅத்தின் **ஒரு நபர் ஜமாஅத்தின் பயனுக்கு மாற்றமான ஒரு வேலையைச் செய்வதாக பொதுச் செயலர் கண்டால்** அந்த வேலையைத் தடுப்பதற்காக அமீர் அல்லது தலைவருக்கு உடனே தகவல் கொடுப்பதற்கான உரிமை பொதுச் செயலருக்கு இருக்கிறது.

**இஸ்லாஹோ இர்ஷாது செயலர்**

நஸாரத்இஸ்லாஹோஇர்ஷாதுமற்றும்நஸாமத்இர்ஷாது வக்ஃஃபேஜதீதுஆகியவற்றின்வழிகாட்டுதல்களின்ஒளியில் ஜமாஅத்தில் திருக்குர்ஆன், ஹதீஸ், நூல்கள், மல்ஃஃபூஸாத் ஆகியவற்றிற்கான தர்ஸுக்கு ஏற்பாடு செய்வது, தர்பிய்யத்திற்கான ஏற்பாடு செய்வது (ஒவ்வொரு மாதமும் ஒரு தர்பிய்யத் கூட்டம் நடத்த முயற்சி செய்ய வேண்டும்), தொழுகை, நோன்பு ஆகியவற்றிற்காக அறிவுரை கூறுவது, தீய சம்பிரதாயங்களை நீக்க முயற்சி செய்வது, முரண்பட்ட பிரச்சனைகள்மற்றும்செயல்அளவிலானபிரச்சனைகளைப் பற்றி ஜமாஅத்துக்குப் புரிய வைத்து சரியான கொள்கைகளுக்கு வழிகாட்டுவது, ஜமாஅத்துகளில் Dish பொருத்துவது, ஜமாஅத் உறுப்பினர்களுக்கும், ஜமாஅத் அல்லாத உறுப்பினர்களுக்கும் M.T.A நிகழ்ச்சிகள், மற்றும் ஹுஸூர் அவர்களின் குத்பாக்கள் மூலமாக பயன்பெற வைக்க முயற்சி செய்து கொண்டிருப்பது, அஹ்மதிகளிடம் ஒருவருக்கொருவர் இருக்கும் பிரச்சனை அல்லது கணவன் மனைவிக்கிடையிலுள்ள சண்டை ஆகியவற்றை இஸ்லாஹீ கமிட்டி (சீர்திருத்தக் குழுவி)-ன் ஒத்துழைப்புடன் சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்வது, திருமண உறவுகளை ஏற்படுத்தும் விவகாரங்களில்

வழிகாட்டுவது, அஹ்மதி அல்லாதவர்களுடன் திருமண உறவை ஏற்படுத்துவதில் உள்ள தடை, அதன் ஞானம் ஆகியவற்றைப் பற்றி சகோதரர்களுக்கு எடுத்துக் கூறுவது, எவர் இந்தக் கட்டளையிலிருந்து முகந்திருப்புகிறாரோ அவருடைய விவகாரத்தை செயற்குழுவில் எடுத்து வைப்பது, ஜமாஅத்தின் அனைத்து சகோதரர்களின் தர்பிய்யத் மற்றும் சீர்திருத்தத்திற்கான வழிவகைகளை மேற்கொள்வது ஆகியவை இஸ்லாஹோ இர்ஷாது செயலரின் பொறுப்பாகும்.

**இஸ்லாஹீ கமிட்டி எனும் சீர்திருத்தக் குழுவிற்கு இஸ்லாஹோ இர்ஷாது செயலர் தலைவர் ஆக்கப்பட்டிருக்கிறார்.** இந்த வகையில் அவரது பொறுப்பு என்னவென்றால், எந்த விவகாரங்கள் அவரது சொந்த முயற்சிகளினால் தீர்வு பெற முடியவில்லையோ அவற்றை அவர் ஜமாஅத் அமீர்/தலைவர் ஆகியோரின் ஆலோசனையுடன் சீர்திருத்தக் குழுவில் எடுத்துவைத்து தீர்வு காண முயற்சி செய்ய வேண்டும்.

**இஸ்லாஹோ இர்ஷாது செயலரின் பொறுப்புகளைப் பற்றி சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 5-12-2003 அன்று ஆற்றிய தமது ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''பிறகு தர்பிய்யத் செயலர் அல்லது இஸ்லாஹோ இர்ஷாது செயலரையும் மிகவும் சுறுசுறுப்பாக்க வேண்டிய தேவை இருக்கிறது. இந்த தர்பிய்யத் செயலர்கள் - சில இடங்களில் இவர்கள் இஸ்லாஹோ இர்ஷாது செயலர் என்றும் அழைக்கப்படுகின்றார்கள் - இவர்கள் தமது குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை உருவாக்கி கீழிலும் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை பணி செய்ய வேண்டிய அளவுக்கு பணி செய்தால் உமூரே ஆம்மாவின் பிரச்சனைகளும் இந்த தர்பிய்யத்தின் மூலமாகவே தீர்வடைந்து விடும். கல்வி தொடர்பான பிரச்சனைகளும் கணிசமான அளவுக்கு குறைந்து விடும். திருமண உறவுகள் தொடர்பான பிரச்சனைகளும் அதிகமான அளவுக்கு குறைந்து விடும். **(இஸ்லாஹோ இர்ஷாது, உமூரே ஆம்மா ஆகிய) இந்த துறைகள் ஒன்றுக்கொன்று எந்த அளவுக்கு தொடர்புள்ளவையாக இருக்கின்றனவென்றால், தர்பிய்யத்தின்**

**துறை சுறுசுறுப்படைந்து விடுவதால் பல துறைகள் தாமாகவே சுறுசுறுப்பாகி விடுகின்றன. மேலும் ஜமாஅத்தின் பொதுவான ஆன்மீக தகுதியும் உயர்ந்து விடும்."**

**மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**"எப்போதும் நோயைப் பற்றிய அடையாளம் தெரிந்ததும் அதை உடனே பிடியுங்கள். அதை வேரறுத்து விடுங்கள்.** பொறுப்பாளர்கள் எல்லா விஷயத்தையும் கண்டும் காணாமல் இருந்து விடாதீர்கள். மாறாக, ஒவ்வொரு தீமையையும் ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். **அதை ஒருபோதும் வளரவோ பரவவோ விடக்கூடாது**........தமது ஜமாஅத்துகளில் ஆய்வு செய்து கொண்டிருங்கள். சீர்திருத்தம் செய்ய வேண்டிய ஒவ்வொரு விஷயத்திலும் உடனே நடவடிக்கை எடுத்து (மேலிடத்திற்கு) அதன் அறிக்கையை அனுப்பி வையுங்கள்.........**பொறுப்பாளர்கள் ஏதாவதொரு விஷயத்தை மறைக்கின்றார்கள் என்றால் அவர்கள் தமது பொறுப்பில் நம்பிக்கை துரோகம் செய்கின்றார்கள்."** *(ஹுஸூர் அவர்களின் 05.11.2010 -ஆம் தேதிய கடிதத்தின் மேற்கோளிலிருந்து)*

**மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

‘‘எங்கெல்லாம் நமது பள்ளிவாயில்கள் இருக்கின்றனவோ, தொழுகை மையங்கள் இருக்கின்றனவோ அங்கு அஹ்மதிகள் அந்தப் பள்ளிவாயில்களிலிருந்தும் எவ்வளவு தொலைவில் இருக்கின்றனர்? எந்தத் தொழுகையில் அதிகமானோர் வருகை தருகின்றனர்? எத்தனை சதவீத மக்கள் கலந்து கொள்கின்றனர்? என்று பாருங்கள்.’’ *(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 05 மே - 11 மே 2006 பக்கம் 2)*

**"பள்ளிவாயில்களுடன் தொடர்பு வைப்பவர்கள் வரை விஷயங்கள் சென்றடைந்து விடுகின்றன.தொடர்பு கொள்ளாதவர்களின் தர்பிய்யதிற்காக அதிக முயற்சி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது."** *(அல்ஃபஸ்ல் 02 ஜூன் 2004 பக்கம் 2)*

‘‘எவர்களின் மூதாதையர்கள் அஹ்மதிகளாக இருந்தார்களோ ஆனால் அவர்களின் சந்ததிகள் தொடர்பில் இல்லையோ அவர்களுடன் தொடர்பு வையுங்கள். அவர்களை(பள்ளிவாயிலுக்கு)அழைத்துவாருங்கள்.பிறகு

இந்தத் தொடர்பை நிரந்தரமாக வையுங்கள்.'' *(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 28 ஏப்ரல் 2006 பக்கம் 13)*

**புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத்திற்காக கூடுதல் இஸ்லாஹோ இர்ஷாது செயலர்**

புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத் தொடர்பாக நஸாரத் இஸ்லாஹோ இர்ஷாது, நஸாமத் இர்ஷாது வக்ஃபே ஜதீது மற்றும் நூருல் இஸ்லாம் துறை ஆகியவற்றின் வழிகாட்டுதல்களின் ஒளியில் புதிதாக பைஅத் செய்தவர்களை சீர்திருத்துவது மற்றும் தர்பிய்யத் செய்வதுஆகியவற்றின்பக்கம்கவனம்செலுத்தவேண்டும். மேலும் அவர்களை முறைப்படி ஜமாஅத் அமைப்புடன் தொடர்புபடுத்தி அவர்களை பொருள் தியாகத்தில் இணைக்க வேண்டும். புதிதாக பைஅத் செய்த இவர்களின் புள்ளி விபரங்களை பாதுகாப்பது, M.T.A-விற்கான ஏற்பாடு செய்ய முயற்சி செய்வது, சம்பந்தப்பட்ட கிளை அமைப்பில் சேர்ப்பது, தனிப்பட்ட, ஒட்டு மொத்தமான வகுப்புகள், இஜ்திமாக்கள் நடத்த ஏற்பாடுகள் செய்வது, ஊரை விட்டு சென்று விட்ட புதிய அஹ்மதிகளைப் பற்றிய தகவலை மேலிடத்திற்கு தெரிவிப்பது, மேலிடத்திற்கு செல்வதற்கான ஏற்பாட்டைச் செய்வது, 6 மாதங்கள், 9 மாதங்கள் அதிகமாக 3 ஆண்டுகள் வரை கட்டமைப்பான ஜமாஅத்தின் நிரந்தரமான அங்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்வது ஆகியவை கூடுதல் இஸ்லாஹோ இர்ஷாது செயலரின் பணியாகும்.

**தஃலீமுல் குர்ஆன் மற்றும் வக்ஃபே ஆர்ஸீ செயலர்**

நஸாரத் தஃலீமுல் குர்ஆனின் வழிகாட்டுதல்களின் ஒளியில் திருக்குர்ஆனை பார்த்து ஓதத் தெரிந்தவர்கள் எத்தனை பேர்? திருக்குர்ஆனை பொருளுடன் தெரிந்தவர்கள் எத்தனை பேர்? என்பது பற்றிய பதிவேட்டை ஆயத்தம் செய்ய வேண்டும். மேலும் திருக்குர்ஆனை ஓதத் தெரியாதவர்களுக்கு பார்த்து ஓதக் கற்றுக் கொடுக்கின்ற, பொருளுடன் தெரியாதவர்களுக்கு பொருள் கற்றுக் கொடுக்கின்ற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மேலும் திருக்குர்ஆனை சரியான உச்சரிப்புடன் ஓதுவதற்கு வகுப்புகளுக்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். மற்ற சகோதரர்களுக்கும் திருக்குர்ஆனை சரியான உச்சரிப்புடன் ஓதக் கற்றுக் கொடுக்கின்ற

ஆசிரியர்களை ஆயத்தம் செய்ய வேண்டும்.

இந்தப் பணிகளுக்காகவும் மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதற்காகவும் வக்ஃபே ஆர்ஸீ செய்யுமாறு ஜமாஅத் சகோதரர்களுக்கு ஆர்வமூட்ட வேண்டும். வக்ஃபே ஆர்ஸீ செய்யும் சகோதரர்கள் மூலமாக மார்க்கக் கல்வி மற்றும் திருக்குர்ஆனின் போதனை தொடர வேண்டும்.

அவ்வாறே தர்ஜுமத்துல் குர்ஆன் என்ற பெயரில் அஞ்சல் வழிப் பாடத்தை நஸாரத் தஃலீமுல் குர்ஆன் நிறுவியிருக்கிறது. அதில் ஜமாஅத் உறுப்பினர்களை அதிகமதிகமாக சேர்க்க வேண்டும். மேலும் ஃபஸ்லே உமர் தஃலீமுல் குர்ஆன் வகுப்பிற்காக அதிகமதிகமான நபர்களை அனுப்புவதற்கான ஏற்பாடு செய்வது ஆகியவை தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸீ செயலரின் பணியாகும்.

**தஃவத்தே இலல்லாஹ் செயலர்**

இயன்றவரை அதாவது தனது உச்சகட்ட ஆற்றலுடன் சம்பந்தப்பட்ட ஊரில் அழகிய முறையில் இஸ்லாம் அஹ்மதிய்யத்தை தப்லீக் செய்ய ஏற்பாடு செய்வது தஃவத்தே இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும்) செயலரின் பணி ஆகும். தப்லீகிற்கான மிகச் சிறந்த வழிவகையை தேடி அவற்றை பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட தனது ஊரைச் சேர்ந்த எந்தவொரு மனிதரும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தப்லீகிற்கு வெளியே இல்லாத அளவுக்கு நாட்டின் எல்லா பகுதிகளிலும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தை பரப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

முடிந்த வரை எல்லா கூட்டத்தினரின், ஒவ்வொரு நபரின் ஆட்சேபனைகளையும் சந்தேகங்களையும் நீக்குவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாவிதமான எதிர்தரப்பிலுள்ள பிரசுரங்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். அவற்றிற்கு பதிலளிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். யவ்மே தப்லீக் எனும் தப்லீக் தினத்தை நடத்துவதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

நஸாரத் தஃவத்தே இலல்லாஹ்வின் வழிகாட்டல்களுக்கேற்ப அதிகமதிகமான சகோதரர்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களாக மாற்றுவது. நஸாரத் தஃவத்தே இலல்லாஹ்வின் முபல்லிக்மார்களுடன்

ஒத்துழைத்தவாறு அவர்களுடன் இணைந்து அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களுக்கு தர்பிய்யத் கொடுப்பது, வழிகாட்டுவது, இந்த நோக்கத்திற்காக அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களின் வகுப்புகளுக்கான ஏற்பாடு செய்வது, புதிய பைஅத்துகளுடன் காணாமற்சென்றுவிட்ட பழைய பைஅத்துகளையும் தேடிக்கண்டு பிடித்து பைஅத் தொடர்பை ஏற்படுத்தும் திட்டத்தை தீவிரமாக்குவது, வாக்குவாதம் உருவாகும் சூழ்நிலையில் அல்லது எதிரிகளிடமிருந்து எதிரான பிரசுரங்கள் வெளியிடப்படும் நேரத்தில் நஸாரத் தஃவத்தே இலல்லாஹ்விடமிருந்து வழிகாட்டலைப் பெற்று நடவடிக்கை எடுப்பது, தேவைக்கேற்ப தப்லீகிற்கான மாநாடுகளை நடத்துவது ஆகியவை.

நூருல் இஸ்லாம் துறையின் சார்பாக கொடுக்கப்பட்டுள்ளசெயல்முறைத்திட்டமாகிய அமைதிக் கருத்தரங்கு, செமினார்கள், புத்தகக் கண்காட்சிகள் ஆகியவற்றில் கலந்து கொள்வது, ஊடகங்கள் மூலமாக அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணியை வளர்ப்பது ஆகியவை.

**சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் தஃவத்தே இலல்லாஹ்வின் பக்கம் கவனமூட்டியவாறு தமது 4-6-2004 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

‘‘அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணி ஒரு நிரந்தப் பணியாகும். **நிரந்தரமாக ஈடுபட்டு செய்யும் பணியாகும். ஒருவரை சந்தித்தோம். அல்லது ஆண்டின் கடைசியில் இரண்டு மாதம் தனது இலக்கை நிறைவு செய்வதற்காக அர்ப்பணித்தோம் என்பதன்று. மாறாக ஆண்டு முழுவதும் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும்.** மேலும் இதன் பக்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். மேலும் நீங்கள் யாரைப் பிடித்தாலும் அவர் எப்படிப்பட்ட இயல்பைக் கொண்டவர் என்பது தெரிந்து விடும்.

எவர்கள் உங்கள் தொடர்பில் இருக்கின்றார்களோ அவர்களுடன் தொடர்ச்சியாக தொடர்பு இருக்க வேண்டும். கடைசியில் ஒரு நேரம் வரும் அல்லது அவரைப் பற்றி, இவருடைய உள்ளம் கடினமானது; மழையின் எந்தவொரு

துளியும் இவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதன்று; **இவர் அப்படிப்பட்ட நிலமே அல்ல;எந்தவொரு நன்மையின் தாக்கமும் இவர் மீது ஏற்படாது என்பது உங்களுக்குத் தெரிந்து விடும். அப்படிப்பட்டவரை நீங்கள் விட்டு விடுங்கள்.** ஆனால் உங்களிடமிருந்து பயன்பெறக் கூடியவர்கள் பலர் இருக்கின்றனர். எனவே இந்தப் பணியை தொடர்ந்து செய்து வர வேண்டும். எனவே சரி, ஆண்டின் இறுதியில் பணியைச் செய்து விடுவோம் என்றிருக்கக் கூடாது.''

**உமூரே ஆம்மா (உள் விவகார) செயலர்**

உமூரே ஆம்மா செயலரிடம் ஜமாஅத்தின் உள் விவகாரங்கள் இருக்கின்றன. அவற்றை அவர் நஸாரத் உமூரே ஆம்மாவின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறார். உதாரணமாக, வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு வேலைக்கான ஏற்பாட்டை செய்வது, பொதுத் தொண்டு செய்வது மற்றும் புதிதாக இணைந்தவர்களின் உள்ளங்களை இணைப்பது, நிவாரணப் பொருள்களை விநியோகம் செய்வதற்கான பணியை செய்வது, ஜமாஅத்தின் கட்டமைப்பை நிலைநாட்டுவது ஆகியவற்றை அவர் செய்ய வேண்டும்.

ஜமாஅத்தின் சொத்துக்களை பாதுகாப்பதில் கவனம் செலுத்துவது, ஒருவருக்கொருவருடனான சண்டை சச்சரவுகளை ஒருவருக்கொருவர் புரிய வைப்பதன் மூலமாக அல்லது இஸ்லாஹீ கமிட்டி எனும் சீர்திருத்தக் குழுவின் மூலமாக நீக்கி, விவகாரங்கள் நீதிமன்றம் வரை செல்ல வேண்டிய நிலை ஏற்படாமல் இருக்க முயற்சி செய்வது.

மேலும் எந்த சகோதரர்கள் அனுமதியின்றி நேரடியாக நீதிமன்றத்திற்கு சென்று விடுகிறார்களோ அவர்களைப் பற்றி குறித்த நேரத்தில் நஸாரத் உமூரே ஆம்மாவுக்கு தெரிவிப்பது, தாருல் கஸாவிடமிருந்து வந்த தீர்ப்புகளை நஸாரத் உமூரே ஆம்மாவின் வழிகாட்டலின்படி குறித்த நேரத்தில் நடைமுறைப்படுத்துவது, உள்ளூர் மற்றும் மாவட்ட அளவிலான அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஜமாஅத் சகோதரர்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்பதற்கான ஏற்பாடு செய்வது மற்றும் ஊடகங்களின் அனைத்து வழிவகைகளையும் ஜமாஅத்திற்கு சாதகமாக பயன்படுத்த முயற்சி செய்வது

ஆகியவை. அவ்வாறே ஜமாஅத்தின் Registration Card (பதிவு அட்டை)-ஐ ஆயத்தம் செய்வதும் அதை Update வைக்க வேண்டியதும் உமூரே ஆம்மா செயலரின் பொறுப்பாகும்.

**சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் உமூரே ஆம்மா செயலரின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியவாறு தமது 5-12-2003 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகிறார்கள் :**

''இப்போது உமூரே ஆம்மா செயலருக்கு, ஒருவர் மற்றவருக்கிடையில் தீர்ப்பு வழங்கிக் கொண்டே செல்வது மட்டுமே பொறுப்பன்று. அல்லது ஒருவருடைய தவறான செயல்களைக் கண்டால் அவற்றைப் பார்த்து மேலிடத்திற்கு தகவல் தெரிவிப்பது மட்டுமன்று. **தமது ஜமாஅத்தில் வேலையற்று இருக்கும் நபர்கள் இருக்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றால் அவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதில் உதவி செய்ய வேண்டும்.** பொதுத் தொண்டும் இருக்கிறது. அதுவும் அவருடைய பொறுப்பாகும். **சிலர் இயல்பாகவே வியாபாரம் செய்யும் சிந்தனையைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களின் பட்டியலை ஆயத்தம் செய்யுங்கள்;அப்படிப்பட்டவர்களிடம் திறமை இருப்பதாக நீங்கள் கண்டால் அவர்களுக்கு கொஞ்சம் பண உதவி செய்து சாதாரண வியாபாரமும் அவர்கள் மூலமாக துவக்கம் செய்யப்பட முடியும்.** அவர்களிடம் திறமை இருந்தால் அந்த வியாபாரம் பொலிவும் பெறும். மேலும் படிப்படியாக சிறந்த வியாபாரியாகி விடலாம். நான் பலரைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் மிதி வண்டியில் சுற்றி வந்து அல்லது ஏதாவதொரு கடைக்கு முன்னால் அமர்ந்து கூடையை வைத்து அல்லது சில துணிமணிகளை வைத்து விற்று வந்தனர். அவர்கள் இப்போது இரண்டு கடைகளுக்கு எஜமானர்களாக இருக்கின்றனர்.

ஆக, அவர்கள் ஏதாவதொரு வேலையில் ஈடுபடும் வகையில் அப்படிப்பட்ட மக்களுக்குப் பின்னால் சென்று இந்த தைரியத்தை ஊட்டுவதும், கவனமூட்டுவதும் ஜமாஅத் அமைப்பின் அல்லது ஜமாஅத் அமைப்புடைய பொறுப்பாளரின் வேலையாகும். உமூரே ஆம்மா செயலரிடம் இந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.''

**உமூரே காரிஜா (வெளி விவகார) செயலர்**

நஸாரத் உமூரே காரிஜாவின் வழிகாட்டல்களுக்கேற்ப (ஜமாஅத்திற்கு வெளியிலுள்ள) மற்றவர்களுடன் தொடர்புடைய ஜமாஅத் விவகாரங்களை சீரமைக்க முயற்சி செய்வது, அதற்காக மாநில மற்றும் நாடு தழுவிய அளவில் அரசு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வது ஆகியவை. உதாரணமாக, மாநிலத்தின் சட்டசபை உறுப்பினர்கள் (M.L.A), பாராளுமன்ற உறுப்பினர்கள் (M.P) மற்றும் பிற அரசியல் தலைவர்களுடன் தொடர்பு கொள்வது, அவர்களை ஜமாஅத்தின் நலனுக்காக பயன்படுத்துவது **ஈது மிலன் விழாவை நடத்துவது** ஆகியவை.

அரசு தேர்தலின்போது நஸாரத் உமூரே ஆம்மா, நஸாரத் உமூரே காரிஜா ஆகியவற்றின் வழிகாட்டல்களுக்கேற்ப (உமூரே காரிஜா செயலர்) உமூரே ஆம்மா (உள் விவகார) செயலருடன் சேர்ந்து ஜமாஅத்தின் பயனைக் கருத்தில் கொண்டவாறு நடவடிக்கை மேற்கொள்வது. மேலும் ஜமாஅத்தின் எதிர்ப்பின்போது உமூரே ஆம்மா செயலர் மற்றும் உமூரே காரிஜா செயலர் ஆகிய இருவரும் இணைந்து வேலை செய்ய வேண்டும். ஜமாஅத்தின் பயனுக்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்றத்தின் பக்கம் செல்வது அவசியமாக இருக்குமென்றால் (ஜமாஅத்தின்) சட்ட ஆலோசகர் (முஷீரே கானூனீ) மற்றும் நஸாரத் உமூரே காரிஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தஃலீம் (கல்விச்) செயலர்**

நஸாரத் தஃலீமின் வழிகாட்டல்களுக்கிணங்க ஜமாஅத்தின் இளைஞர்கள், இளவயதுப் பெண்களின் மார்க்க, உலகக் கல்வி பற்றி ஆய்வு செய்வது, அவர்களுக்கு பொருத்தமான வழிகாட்டல் வழங்கிக் கொண்டிருப்பது, ஜமாஅத்தின் அறிவுத் திறனுள்ள பிள்ளைகள் பொருளாதார வறுமையின் காரணமாக கல்வியிலிருந்து இழப்பிற்குரியோராக இருக்கின்றார்கள் என்றால் அவர்களுக்காக மேலிடத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் கல்விக்கான உதவியின் பக்கம் கவனம் செலுத்துவது, மேலிடத்தின் மார்க்கக் கல்வி பாடத்திட்டத்தின் தேர்வுகளில் ஜமாஅத்தின் அதிகமதிகமான உறுப்பினர்களை கலந்து கொள்ள

வைப்பது, ஆண்களும் பெண்களும் இணைந்து படிக்கும் கல்லூரியில் பயிலும் மாணவிகளிடமிருந்து மேலிடத்திலிருந்து வெளியிடப்பட்ட பர்தாவை பேணுவது தொடர்பான படிவத்தை நிரப்பி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வது, ஒவ்வோர் அஹ்மதி மாணவ மாணவியும் ஹுஸூர் அவர்களுடன் தொடர்பு கொள்ள வைப்பதும் துஆவிற்கான கடிதம் எழுத வைப்பது ஆகியவை.

**சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கல்விச் செயலரின் பொறுப்புகளைப் பற்றி தமது 5-12-2003 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகிறார்கள் :**

''பிறகுகல்விச்செயலர்இருக்கின்றார்.ஜமாஅத்துகளில் பொதுவாககல்விச்செயலர்கள்,அவர்களிடம்எதிர்பார்க்கும் அளவுக்கு சுறுசுறுப்பாக இருப்பதில்லை. அல்லது ஒரு பொறுப்பாளரிடம் எதிர்பார்க்கும் அளவுக்கு சுறுசுறுப்பாக இருப்பதில்லை. **நான் இதை அனுமானமாகக் கூறவில்லை. ஒவ்வொரு ஜமாஅத்தும் தன்னைப் பற்றி ஆய்வு செய்தால் சில செயலர்கள் ஆண்டு முழுவதும் எந்த வேலையும் செய்வதில்லை என்பது தெரிய வரும்.** உதாரணமாக, கல்விச் செயலருக்கான உதாரணத்தைக் கூறுகிறேன். கல்விச் செயலரின் பொறுப்பு என்னவெனில், தனது ஜமாஅத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளின் பட்டியலை ஆயத்தம் செய்ய வேண்டும். பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய வயதைக் கொண்டவர்கள் பள்ளிக்கூடம் செல்லவில்லை என்றால் அவர்கள் பள்ளிக்கூடம் செல்லாததற்கு என்ன காரணம் எனக் கண்டறியுங்கள். பொருளாதார கஷ்டமா? அல்லது சோம்பேறித்தனமா? ஓர் அஹ்மதி பிள்ளைக்கு இவ்வாறு நேரத்தை வீணாகக் கூடாது என்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக, பாகிஸ்தானில் ஒவ்வொரு பிள்ளையும் கண்டிப்பாக பத்தாம் வகுப்பு வரை படித்து தேர்ச்சி பெற வேண்டும் என ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹுத் தஆலா) அவர்கள் நிபந்தனை விதித்திருந்தார்கள். இன்னும் கூறுவதாயின் இப்போது கல்வித் தகுதி இன்னும் உயர்ந்து விட்டது. எனவே ஒவ்வொரு மாணவரும் மேனிலை வகுப்பு வரை (12-ஆம் வகுப்பு வரை) படிக்க வேண்டும் என நான் கூறுவேன்.''

**பொருளாளர்**

உள்ளூர் ஜமாஅத்தின் கட்டாயச் சந்தாக்கள் (ஹிஸ்ஸா ஆமது, சந்தா ஆம், ஜல்ஸா சாலானா) ஆகியவற்றிற்கான பட்ஜெட்டை நஸாரத் பைத்துல் மால் ஆமதின் வழிகாட்டல்களுக்கிணங்க ஆயத்தம் செய்து மேலிடத்துக்கு அனுப்புவது, இந்த நிதி அறிக்கையின் (பட்ஜெட்டின்) ஒரு நகலை உள்ளூர் ஜமாஅத்தில் பாதுகாத்து வைப்பது, சம்பாதிக்கின்ற எல்லா ஆண்கள், பெண்களிடமிருந்தும் அவர்களின் முழுமையான வருவாய் மற்றும் விகிதாச்சாரத்திற்கேற்ப கட்டாயச் சந்தாக்களை வசூல் செய்வது, ஸகாத் கொடுக்க கடமைப்பட்டவர்களிடமிருந்து ஸகாத் வசூலிப்பதற்கான ஏற்பாடு செய்வது ஆகியவை.

முஹஸ்ஸிலீன்(சந்தாவைவசூல்செய்பவர்கள்)-க்கான ஏற்பாடு இருக்கும் நிலையில் அவர்களுக்கு கணக்கேட்டை (ரசீது புக்கை)க் கொடுப்பது, குறித்த நேரத்தில் அவர்களிடமிருந்து கணக்கேடு (ரசீது புக்) மற்றும் தொகையை திரும்பப் பெறுவது, நஸாரத் பைத்துல் மால் ஆமது தொடர்பான மேலிடத்து வழிகாட்டல்களை தெரியப்படுத்த முயற்சி செய்வது மற்றும் அதன்படி செயல்பட வைப்பது ஆகியவை.

சந்தா தொடர்பாக விதிமுறைகளுக்கேற்ப மேலிடத்துடன்கடிதப்போக்குவரத்துவைத்துக்கொள்வது, மேலிடத்திலிருந்து கேட்கப்படும் விபரங்களையும் சந்தா விபரப் பட்டியலையும் ஆயத்தம் செய்து கொடுப்பது, கட்டாயச் சந்தாக்களை வசூலிப்பது மட்டுமின்றி, ஜமாஅத்தின் மற்ற சந்தாக்களின் வசூல் பற்றியும் கணக்கு வைப்பது, உள்ளூர் ஜமாஅத்திற்கான வரவு செலவு பட்ஜெட்டை ஆயத்தம் செய்து செயற்குழுவில் எடுத்து வைப்பது மற்றும் எல்லா விதமான சந்தா விவகாரங்களும் நேரடியாக பொருளாளருடன் தொடர்புடையவையாகும்.

**சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பொருளாளரின் பொறுப்புகளைப் பற்றி விளக்கியவாறு தமது 16-8-2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகிறார்கள் :**

‘‘பிறகு நான் கவனமூட்ட விரும்பும் இன்னொரு விஷயம், ஜமாஅத் சகோதரர்களுக்கு சந்தாக்களின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவதாகும். நினைவில் கொள்ளுங்கள். இந்த விஷயத்தை பொதுவாக நான் பொருளாளர்களிடமும் கூறுகிறேன். **சந்தா ஒரு வரி அல்ல. செலுத்த வேண்டும் என்பதன் பக்கம் அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் கட்டளையிட்ட கடமைகளில் அது அடங்கும்.** ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; உங்களால் இயன்ற அளவுக்கு செவி சாயுங்கள்; கட்டுப்படுங்கள்; செலவு செய்யுங்கள். இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். தங்கள் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து காப்பாற்றப்படுபவர்களே வெற்றி பெறுபவர்களாவர். நீங்கள் அல்லாஹ்வுக்கு அழகிய கடனைக் கொடுப்பீர்கள் என்றால் அவன் அதை பன்மடங்காக்கித்தருவான். மேலும் உங்களை மன்னிப்பான். மேலும் அல்லாஹ் மிகவும் மதிப்பளிப்பவனும் சகித்துக் கொள்பவனுமாவான். *(திருக்குர்ஆன் 64:17,18)*

எனவே பொருளாளர்கள் இந்த வழிமுறையில் ஜமாஅத் சகோதர்களுக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. பொருள் தியாகம் செய்யும்போது இறையச்சம், ஈமான் உறுதியாகிறது..........எனவே எல்லா மட்டத்திலும் பொருளாளர்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. பொருளாளர்களின் பணி என்னவென்றால், தமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு நபர் வரை அவரது சொந்த அணுகுதல் இருக்க வேண்டும். கிளை அமைப்புகளிடம் ஒப்படைத்து விட்டு கிளை அமைப்புகள் அதில் உதவி செய்ய வேண்டும் என இருந்து விடக் கூடாது. **கிளை அமைப்புகள் தமது உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கும் அளவுக்கு உதவி செய்யும். அதை விட அதிகமாக கிளை அமைப்புகளுக்கு பொருளாளருடன் உதவி செய்யும் வேலை இல்லை.** கிளை அமைப்புகள் பொருளாளர்களுடன் ஒத்துழைப்பு வழங்குங்கள் என தமது உறுப்பினர்களுக்கு கவனமூட்டலாம். சந்தாவின் ஆன்மாவை புரிய வைக்கலாம். எப்படியிருந்தாலும் **சந்தாவின் ஆன்மாவை புரிவது கிளை அமைப்புகளின் வேலையாகும். ஆனால் பொருளாளர்கள் இந்த பொறுப்பிலிருந்து விலகி விட முடியாது**.......... பொருளாளர்களின் வேலை என்னவென்றால், ஒவ்வோர்

உள்ளூர் அளவிலும், ஒவ்வொரு வீடு வரையிலும் சென்றடைய முயற்சி செய்ய வேண்டும். இப்போது தொலைபேசி இருக்கிறது. மற்ற வழிவகைகள் இருக்கின்றன. வாகனங்கள் இருக்கின்றன.''

**துணைப் பொருளாளர்**

துணைப் பொருளாளர் பொருளாளரிடமிருந்து சந்தா பாக்கி வைத்திருப்பவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்று அவர்களுடன் தொடர்பு கொள்வது, பாக்கித் தொகையை நிறைவேற்றுமாறு தூண்டுவது, சந்தா கொடுக்காதவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை சந்தா கொடுப்பவர்களாக மாற்றுவது.

புதிதாக பைஅத் செய்தவர்களை சந்தாவில் இணைப்பது, அவர்கள் ஜமாஅத் அமைப்பின் நிரந்தரமான உறுதிமிக்க அங்கமாக மாறி விகிதாச்சாரப்படி சந்தா அமைப்பில் இணையும் வகையில் அவர்களுக்கு தர்பிய்யத் கொடுப்பது ஆகியவை.

**வஸிய்யத் செயலர்**

சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் திட்டமாகிய வஸிய்யத் அமைப்பில் இணைவதை கவனத்தில் கொண்டவாறு இந்த பொறுப்பின் முக்கியத்துவம் தற்போது முன்னரை விட எவ்வளவோ அதிகமாகி விட்டது. **இந்த (வஸிய்யத் செயலர்) பொறுப்புக்கு அவரே வஸிய்யத் செய்தவராக இருப்பது அவசியமாகும்.** வஸிய்யத் அமைப்பு அசாதாரணமான பொருள் தியாகத்துடன் தொடர்பு கொண்டதாகும். ஹுஸூர் அவர்களின் திட்டம் மற்றும் விருப்பத்தை முன்னிறுத்தியவாறு குறைந்தது ஜமாஅத்தின் 50% பேரை வஸிய்யத் அமைப்பில் இணைக்க முயற்சி செய்ய வேண்டும். மேலும் பெஹஷ்தி மக்பரா அலுவலகத்திலிருந்து கிடைக்கும் வழிகாட்டல்கள், சுற்றறிக்கைகள் ஆகியவற்றிற்கேற்ப செயல்படுவது, ஜமாஅத்திலுள்ள வஸிய்யத் செய்தவர்களுக்கு எல்லா விஷயங்களிலும் வழிகாட்டுவது ஆகியவை வஸிய்யத் செயலரின் பொறுப்பாகும்.

உள்ளூர் ஜமாஅத்தின் எல்லா வஸிய்யத் செய்த ஆண்களையும், வஸிய்யத் செய்த பெண்களையும்

கொண்ட அட்டவணையையும் தம்மிடம் வைப்பது, நடப்பு ஆண்டில் அட்டவணையை நிறைவு செய்து கொண்டிருப்பது, மற்ற ஊர்களுக்கு சென்று விடுகின்றவர்கள், ஜமாஅத்தில் புதிதாக வஸிய்யத் செய்த ஆண்கள், பெண்களைப் பற்றி வஸிய்யத் அலுவலகத்திற்கு தகவல் கொடுப்பது.

வஸிய்யத் செய்தவர்களுக்காக அவ்வப்போது கூட்டங்களை நடத்துவது, வஸிய்யத் செய்தவர்கள் அனைவருக்கும் அலுவலகத்தின் கடிதங்களுக்கு பதில் எழுதுமாறு வழிகாட்டுவது, முகவரி மாற்றம் ஏற்படும்போது அலுவலகத்திற்கு உரிய நேரத்தில் தகவல் கொடுக்குமாறு வழிகாட்டுவது.

படிக்காத வஸிய்யத் செய்தவர்களுக்கு திருக்குர்ஆன் பார்த்து ஓதக் கற்றுக் கொடுப்பது, பார்த்து ஓதத் தெரிந்தவர்களுக்கு பொருளைக் கற்றுக் கொடுப்பது, அதன் விளக்கவுரையை கற்றுக் கொடுப்பதற்கான செயல்முறைத் திட்டத்தை வகுத்து செயல்பட வைப்பது. **வஸிய்யத் செய்த ஒவ்வொருவரும் குறைந்தது திருக்குர்ஆன் ஓதத் தெரியாத இரண்டு நபர்களுக்கு திருக்குர்ஆனை ஓதக் கற்றுக் கொடுக்க வேண்டும்.**

வஸிய்யத் செய்தவர்களுக்கு வஸிய்யத் விதிமுறைகளைப் பற்றி தெரிவிப்பது, அவர்களின் வஸிய்யத் தொடர்பாக ஏற்படும் சிக்கல்களுக்கு வழிகாட்டல் வழங்குவது, உதவி செய்வது.

எந்த வஸிய்யத் செய்தவர்கள் தமது வாழ்வில் தமது சொத்தை மதிப்பிட்டு அதற்கான ஹிஸ்ஸா ஜாயிதாது சந்தாவை (சொத்துக்கான சந்தாவை) கொடுக்க விரும்புகிறார்களோ அது தொடர்பாக அவர்களுக்கு வழிகாட்டுவது, உதவி செய்வது.

வஸிய்யத் செய்தவரின் மரணத்தின்போது அவருடைய வாரிசுக்கு இது தொடர்பாக உடனடியாக தகவல்களை வழங்குவது, இது தொடர்பாக அவர்களுக்கு முயன்றவரை உதவி செய்வது.

உள்ளூர் ஜமாஅத் அலுவலகத்தில் அல்வஸிய்யத் நூல், வஸிய்யத் படிவம், சம்பந்தப்பட்ட மற்ற படிவங்கள் கிடைக்க வைப்பது ஆகியவற்றை உரிய நேரத்தில் சகோதரர்களுக்கு வழங்குவது.

சில நேரத்தில் வஸிய்யத் அலுவலகத்துக்கு வஸிய்யத் செய்தவர்களுடன் தொடர்பு இல்லாத நிலையில், வஸிய்யத் செய்தவர்களின் கடிதங்கள் வஸிய்யத் செயலர் மூலமாக காதியானிலிருந்து அனுப்பி வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தக் கடிதங்களை வஸிய்யத் செய்தவர்களுக்கு குறித்த நேரத்தில் சென்றடைய வைப்பதும் (கடிதத்தைப் பெற்றுக் கொண்ட வஸிய்யத் செய்தவர்கள்) பெஹஷ்தி மக்பரா அலுவலகத்திற்கு உடனடியாக பதிலைப் பற்றிய தகவல் தெரிவிப்பதற்காக அவர்களுக்கு வழிகாட்டுவதும் வஸிய்யத் செயலரின் பணியாகும்.

**வெளியீட்டு செயலர்**

நஸாரத்நஷ்ரோஇஷாஅத்தின்வழிகாட்டல்களுக்கேற்ப அவர்களிடமிருந்து வழிகாட்டல்களைப் பெற்று பணி செய்வது, ஜமாஅத்திற்காக நூல்களுக்கான ஏற்பாடு செய்வது, ஜமாஅத்தின் வெளியீட்டுப் பணிகளில் அலுவலக வழிகாட்டல்களை கவனத்தில் கொண்டவாறு வேலை செய்வது ஆகியவை. ஜமாஅத்தின் பத்திரிகைகள், இதழ்கள் ஆகியவற்றில் பொருத்தமான கட்டுரைகள், பிரசுரங்களை வெளியிடுவதற்காக முயற்சி செய்வது, இஸ்லாத்திற்கும் அஹ்மதிய்யத்திற்கும் ஆதரவாக அல்லது எதிராகவெளிவரும்எல்லாவிதமானநூல்கள்,பத்திரிகைகள் ஆகியவற்றை மேலிடத்திற்கு அனுப்புவது, அதைப் பாதுகாப்பது. உள்ளூர் ஜமாஅத்தின், ஊரின் வரலாற்றை பாதுகாப்பது, வடிவமைப்பது, அவற்றை வெளியிடுவது ஆகியவற்றின் பொறுப்பும் இஷாஅத் செயலரைச் சாரும். அதற்காக மதிப்பிற்குரிய இன்சார்ஜ் சாஹிப் ஷுஅபா தாரீகே அஹ்மதிய்யத் காதியான் அவர்களுடன் தொடர்பு கொள்வது ஆகியவை அவரது பணியாகும்.

**MTA - விற்காக கூடுதல் வெளியீட்டு செயலர்**

இந்த செயலரும் நஸாரத் நஷ்ரோ இஷாஅத்திடமே தொடர்பு கொண்டு வழிகாட்டலைப் பெற வேண்டும். ஒவ்வொரு ஜமாஅத்திலும் ஜமாஅத் அளவில் M.T.A-விற்காக Dish பொருத்துவதற்கான ஏற்பாடு செய்வது, தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் சகோதரர்கள் சொந்தமாக தமது வீடுகளில் M.T.A-வை பொருத்துவதற்காக ஊக்கமளிப்பது, M.T.A-வின் ஒளிபரப்புகளிலிருந்து

பயன்பெறுவதற்காக கவனமூட்டிக் கொண்டிருப்பது.

**சொத்து செயலர்**

நஸாமத் ஜாயிதாதின் (சொத்து நிர்வாகத்தின்) வழிகாட்டல்களுக்கிணங்க ஜமாஅத்தின் கட்டடங்கள் மற்றும்சொத்துக்கள்ஆகியவற்றைக்கண்காணிப்பதற்கான, பாதுகாப்பதற்கான ஏற்பாடு செய்வது. அசையும் சொத்துக்கள், அசையாத சொத்துக்கள் ஆகிய அனைத்து சொத்துக்களைப் பற்றிய பதிவேடுகளை சரியாகவும் முழுமையாகவும் வைப்பது. சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் பெயரில் ரிஜிஸ்டர் செய்வது. சொத்தை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பெயரில் மாற்றி எழுதுவது ஆகியவற்றை முழுமை செய்து பதிவுக்காக காதியான் நஸாமத் ஜாயிதாதுக்கு (சொத்து நிர்வாகத்திற்கு) அனுப்புவது ஆகியவை.

எல்லா அசையும் சொத்துக்கள், அசையாத சொத்துக்கள் ஆகியவற்றைப் பற்றிய பட்டியலை விபரத்துடன் ஒரு பதிவேட்டில் குறிப்பிட்டு அதன் ஒரு நகலை நஸாமத் ஜாயிதாதுக்கு அனுப்புவது அவசியமாகும்.

எல்லா அசையும் சொத்துக்கள், அசையாத சொத்துக்கள் ஆகியவற்றின் பட்டியலை விபரங்களுடன் ஒரு பதிவேட்டில் குறிப்பிட்டு அதன் ஒரு நகலை நஸாமத் ஜாயிதாதுக்கு அனுப்பி வைப்பது அவசியமாகும்.

ஜமாஅத்தின் கட்டடங்களை கவனிப்பதும் கண்காணிப்பதும் உள்ளூரின் ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்துடன் அவற்றின் முழுமையான அட்டவணையை தனது பதிவேட்டில் வைப்பது. ஒவ்வொரு வரைபடத்தின் ஒரு நகலை நஸாமத் ஜாயிதாதிலும் பாதுகாத்து வைக்க ஏற்பாடு செய்வது, மேலும் ஒவ்வொரு கட்டடத்திலும் அவ்வப்போது நடக்கும் சீரமைப்புப் பணிகளையும் பதிவு செய்வது, கட்டடப் பணிகளுக்கான பொருள்களை வாங்குவது சேமித்து வைப்பது ஆகியவற்றை முறைப்படி பதிவு செய்வது.

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் எல்லா அசையும் சொத்துக்கள், அசையா சொத்துக்கள் (தொகை நீங்கலாக) எல்லாஏற்பாடுகளையும்உதாரணமாக,எல்லாஅவசியமான பத்திரங்கள்,(பத்திரங்களின் நகல்கள், யாருக்குச்

சொந்தமானவை ஆகிய விபரங்கள்) பற்றிய பதிவை வைப்பது, அசல் பத்திரத்தை மேலிடத்திற்கு அனுப்புவது சொத்து செயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜமாஅத்தின் அனைத்து சொத்துக்கள் தொடர்பாக எல்லாவிதமான வழக்குகளையும் தொடர்வது, அனைத்து சொத்துக்களையும் வாங்குவது விற்பது, குத்தகைக்கு விடுவது, வாடகைக்கு கொடுப்பது, வாங்குவது (நஸாமத் ஜாயிதாதின் அனுமதியுடன் ஜமாஅத்தின் கட்டடங்களை குடியிருப்பதற்காக அல்லது வாடகைக்கு கொடுக்கும் பட்சத்தில் அவர்களிடம் License deed-ஐ முழுமை செய்து அனுப்புவது). அடமானம் வைப்பது அல்லது கொடுப்பது, விலைக்கு வாங்குவது அல்லது வேறு ஏதாவது வகையில் மாற்றுவது அல்லது பெறுவதற்கான ஏற்பாடு செய்வது ஆகியவை மேலிடத்தின் அனுமதியுடன் நடைபெறும். மேலும் இது தொடர்பான நடவடிக்கை சொத்து செயலரிடம் ஒப்படைக்கப்படும். **ஜமாஅத்தின் தேவைகளுக்காக வாங்கப்படும் பொருள்கள் அதன் மதிப்பு 500 அல்லது அதை விட அதிகமான ரூபாயாக இருந்தால் அது பற்றி சொத்து பதிவேட்டில் குறிப்பிடப்படுவது அவசியமாகும்.** இந்த நோக்கத்திற்காக சொத்து பதிவேட்டை வைப்பதும் சம்பந்தப்பட்ட பொருள்களை அதில் பதிவு செய்வதும் சொத்து செயலரின் பொறுப்பாகும்.

**விருந்தோம்பல் செயலர்**

தலைவர் அல்லது அமீரின் வழிகாட்டலுக்கிணங்க ஜமாஅத்திற்கு வரும் விருந்தினர்களுக்கு விருந்தோம்பலுக்கான ஏற்பாட்டை செய்வது, அவர்கள் தங்குவதற்கு பொருத்தமான ஏற்பாடு செய்வது ஆகியவை.

**தஹ்ரீகே ஜதீது செயலர்**

1934- ல் தஹ்ரீகே ஜதீது திட்டம் நிறுவப்பட்டது. ஜமாஅத்தின் அதிகமதிகமான சகோதரர்களை தஹ்ரீகே ஜதீதின் சந்தா எனும் அறப்போரில் கலந்து கொள்ள வைப்பது, ஜமாஅத் சகோதரர்களை இறந்துபோன தமது உறவினர்களின் சார்பாகவும் சந்தா செலுத்துவதன் பக்கம் கவனமூட்டுவது. தஹ்ரீகே ஜதீதின் நிதியாண்டு நவம்பர் 1-ஆம் தேதியுடன் ஆரம்பமாகிறது. ஹுஸுர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் குத்பாவிற்குப் பிறகு உடனே ஜமாஅத்

சகோதரர்களிடமிருந்து வாக்குறுதிகளை வாங்குவதற்காக ஜமாஅத் உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வது, அவர்களின் தகுதிக்கேற்ப புதிய நிதியாண்டிற்கான வாக்குறுதிகளைப் பெற்று மேலிடத்திற்கு அனுப்புவது, அவர்களின் ஒவ்வொரு நபரின் பதிவை தன்னிடம் வைப்பது ஆகியவை தஹ்ரீகே ஜதீது செயலரின் பணியாகும்.

இறந்து விட்டவர்களில் முதல் பதிவேட்டில் இருக்கும் எல்லா நபர்களின் சந்தாவையும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் விருப்பத்திற்கேற்ப மறுமை வரை உயிருடன் வைப்பதற்காக அவர்களின் வாரிசுகளிடமிருந்து இறந்து விட்ட அந்த பெரியவர்களின் பெயரில் தஹ்ரீகே ஜதீதுக்கான வாக்குறுதிகளை வாங்குவது.

(தஹ்ரீகே ஜதீதின் முதல் பதிவேடு என்பது 1934-ஆம் ஆண்டிலிருந்து 1944-ஆம் ஆண்டு வரையில் தஹ்ரீகே ஜதீது சந்தாவில் கலந்து கொள்பவர்களைக் குறிக்கும்.)

தஹ்ரீகே ஜதீதின் நிதியாண்டு 31, அக்டோபர் மாதத்தில் நிறைவடைகிறது. அதற்கு முன்னர் எல்லா வாக்குறுதிகளையும் வசூல் செய்வதை நூறு சதவீதம் உறுதி செய்வது ஆகியவை தஹ்ரீகே ஜதீது செயலரின் பணியாகும்.

தஹ்ரீகே ஜதீது சந்தாவில் கலந்து கொண்டு அறப்போர் செய்பவர்கள் கீழ்வரும் வழிமுறைப்படி தத்தமது பதிவேட்டைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர்:

1. 1934 முதல் 1944 வரை கலந்து கொண்டவர்கள் முதல் பதிவேட்டைச் சேர்ந்தவர்களாவர்.

2. 1944 முதல் 1965 வரை கலந்து கொண்டவர்கள் இரண்டாம் பதிவேட்டைச் சேர்ந்தவர்களாவர்.

3. 1965 முதல் 1985 வரை கலந்து கொண்டவர்கள் மூன்றாம் பதிவேட்டை சேர்ந்தவர்கள்.

4. 1985 முதல் 2004 வரை கலந்து கொண்டவர்கள் நான்காம் பதிவேட்டைச் சேர்ந்தவர்களாவர்.

5. 2004 முதல் தற்போது வரை கலந்து கொள்பவர்கள் ஐந்தாம் பதிவேட்டைச் சேர்ந்தவர்களாவர்.

தஹ்ரீகே ஜதீது செயலர்கள் வாக்குறுதிகளை வாங்கும்போது இக்காலகட்டத்தை கவனத்தில்

கொண்டவாறு ஒவ்வொரு வாக்குறுதியுடனும் பதிவேட்டின் பெயரையும் குறிப்பிடுங்கள்.

வகாலத்தே மால் தஹ்ரீகே ஜதீது அலுவலகத்தின் வழிகாட்டல்களை ஜமாஅத் சகோதரர்களுக்கு எடுத்துரைத்துதஹ்ரீகேஜதீதுசந்தாவின்முக்கியத்துவத்தின் பக்கம் கவனம் செலுத்திக் கொண்டிருப்பது தஹ்ரீகே ஜதீது செயலரின் பொறுப்பாகும்.

**வக்ஃபே ஜதீது செயலர்**

1957-ஆம் ஆண்டு வக்ஃபே ஜதீது சந்தா திட்டம் நிறுவப்பட்டது. வக்ஃபே ஜதீது சந்தாவின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் பற்றி ஜமாஅத் சகோதரர்களுக்கு தெரிவிப்பது, ஜமாஅத்தின் அதிகமதிகமான சகோதரர்களை வக்ஃபே ஜதீதின் பொருள் தியாக அறப்போரில் கலந்து கொள்ள வைப்பது, ஜமாஅத் சகோதர்கள் மரணித்து விட்ட தமது உறவினர்களின் சார்பாகவும் சந்தாவை நிறைவேற்றுவதன் பக்கம் தூண்டுவது, ஜமாஅத் சகோதர்களிடமிருந்து வக்ஃபே ஜதீது சந்தாவிற்கான வாக்குறுதிகளை வாங்குவது, அவற்றைப் பற்றிய தனிப்பட்ட பதிவுகளை வைப்பது, நஸாமத்தே மால் வக்ஃபே ஜதீது அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட இலக்கை முழுமை செய்ய முயற்சி செய்வது, நஸாமத்தே மால் வக்ஃபே ஜதீது அலுவலகத்திலிருந்து வக்ஃபே ஜதீது நாள் அல்லது வாரம் அல்லது பத்து நாள் கொண்டாடுவதற்கான கட்டளை வரும்போது அதற்கான ஏற்பாடு செய்வது ஆகியவை வக்ஃபே ஜதீது செயலரின் பொறுப்பாகும்.

**வக்ஃபே நவ் செயலர்**

அனைத்து வக்ஃபே நவ் பிள்ளைகளின் தனிப்பட்ட பதிவேட்டையும் அவர்களின் கோப்புகளையும் (Files) முழுமைப்படுத்தி வைப்பது, நாஸிர் சாஹிப் தஃலீம், இந்திய வக்ஃபே நவ் அலுவலக இன்சார்ஜ் ஆகியோரின் வழிகாட்டல்களுக்கேற்ப வக்ஃபே நவ் செய்தவர்களை ஜமாஅத்தின் மிகச் சிறந்த செல்வமாக பாதுகாப்பது, அவர்களுக்காக முறைப்படி வகுப்புகளுக்கான ஏற்பாடு செய்வது, அவர்களுக்கு வழிகாட்டுவது, அவர்களின் எதிர்காலத்திற்காக Career Planning Committee-ல் அவர்களின் விவகாரங்களை, குறித்த நேரத்தில் எடுத்து வைப்பது

ஆகியவை வக்ஃபே நவ் செயலரின் பணியாகும்.

**முஹாஸிப் (கணக்கர்) மற்றும் அமீன் (சந்தாவை அமானிதமாக வைப்பவர்)**

இந்த இரு பொறுப்புகளையும் பொருளாளர் செய்து வருகின்றார். பொருளாளரின் பணி விரிவடைந்து விட்டால் அப்போது முஹாஸிப் (கணக்கர்) மற்றும் அமீன் (சந்தாவை அமானிதமாக வைப்பவர்) நியமிக்கப்படலாம். இல்லையென்றால் தேவையில்லை. முஹாஸிபின் வேலை ஜமாஅத்தின் கணக்குகளை வைப்பதாகும். வருவாயின் கணக்கை தனியாகவும், செலவினங்களின் கணக்கை தனியாகவும் வைக்க வேண்டும். அமீனின் வேலை பொருளாளரிடமிருந்து சந்தா தொகையை வாங்கி பாதுகாப்பாக வைப்பது, சந்தா தொகையை அனுப்பும்போது அந்தத் தொகையை பொருளாளரிடம் ஒப்படைப்பது ஆகியவையாகும்.

**ஆடிட்டர் (தணிக்கைச் செயலர்)**

சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் விதிமுறைகளுக்கேற்ப உள்ளூர் அஞ்சுமனின் கணக்குகளை தணிக்கை செய்வது, தனது அறிக்கையை நாளேட்டில் குறிப்பிடுவது, கணக்கு தவறுதலாக இருப்பது பற்றி தெரியவரும்போது அதை சரி செய்ய வைப்பது ஆகியவை. உள்ளூர் ஜமாஅத்தின் காலாண்டு/ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையை ஆயத்தம் செய்து நஸாரத் பைத்துல் மால் ஆமதுக்கு அனுப்புவது, அந்த அறிக்கையின் நகலை உள்ளூர் அமீர்/தலைவருக்கு கொடுப்பது ஆகியவை. மேலும் இந்த அறிக்கையை செயற்குழுவில் பொருளாளர் எடுத்து வைப்பார்.

**இமாமுஸ் ஸலாத்**

விதிமுறைகளுக்கேற்ப ஒவ்வொரு ஜமாஅத்திலும் ஒருவரை விட அதிகமான இமாமுஸ் ஸலாத் நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் சரியான உச்சரிப்புடன் ஜமாஅத்தாக தொழுகை நடத்தும் பொறுப்பில் இருக்க வேண்டும். ஜமாஅத்தின் முபல்லிக் அல்லது முஅல்லிம் இருந்தாலும் தொழுகையை நடத்துவதற்கான பொறுப்பு அமீருக்கு அல்லது நியமிக்கப்பட்ட இமாமுஸ் ஸலாத்திற்கு இருக்கிறது. முபல்லிகிற்கோ முஅல்லிமிற்கோ அல்ல.

ஆயினும் சந்தர்ப்பத்தில் இமாமுஸ் ஸலாத் இல்லாவிட்டால் முபல்லிக் அல்லது முஅல்லிமும் தொழுகை நடத்தலாம். *(நஸாரத் உல்யாவின் சுற்றறிக்கை 53/02.11.17)*

**முஹஸ்ஸிலின் (சந்தா வசூல் செய்பவரின்) கடமைகள்**

தனது வட்டத்திலுள்ள அஹ்மதி சகோதரர்கள் பற்றி அறிமுகம் செய்து வைப்பது, அவர்களிடமிருந்து எல்லாவிதமான ஜமாஅத்தின் சந்தாக்களை வசூல் செய்வது, சந்தா ரஸீது புக்குடன், வசூலான சந்தா தொகையையும் மாதம் இருமுறை பொருளாளரிடம் ஒப்படைப்பது ஆகியவை.

**ரிஷ்தா நாத்தா (திருமண உறவுத் துறை) செயலர்**

ஜமாஅத்தில் திருமணத்திற்கு தகுதியானவர்களின் விபரங்களை சேகரிப்பது, உள்ளூர் பதிவை மேலிடத்திலுள்ள ரிஷ்தா நாத்தா அலுவலகத்துடன் முழுமையாக வைப்பது, எல்லா விபரங்களையும் இரகசியமாக வைத்து வரன்களுக்காக ஆலோசனை வழங்குவது, ஜமாஅத் சகோதரர்களுக்கு நிகாஹ் படிவம் கொடுப்பது, கைம்பெண்களின் (விதவைகளின்) மறுமணத்திற்கு முயற்சி செய்வது, தர்பிய்யத் விஷயங்கள் தொடர்பாக ஜமாஅத்திற்கு தீய சம்பிரதாயங்களிலிருந்து விலகியிருப்பதன் பக்கம் கவனமூட்டுவது, ஜமாஅத்தின் மரபுகளுக்கு மாற்றமாக ஏதாவது நடைபெறுகிறதென்றால் விதிமுறைகளுக்கேற்ப அதற்கு நடவடிக்கை எடுப்பது ஆகியவை ரிஷ்தா வ நாத்தா செயலரின் பொறுப்பு ஆகும்.

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:**

''வரன் பார்ப்பவர்களின் பணி என்னவென்றால், அவர் இரு வீட்டாரின் நிலைமைகளுக்கேற்ப பொருத்தமான, சரிசமமான, சமன்பாட்டைக் கொண்ட வரனைத் தேட வேண்டும். **ஆயினும் பொறுப்பேற்றுக் கொள்ளக் கூடாது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.** நீங்களே திருப்தி கொண்ட பிறகு முடிவெடுங்கள் என இரு தரப்பினருக்கும் தெளிவுபடுத்தி விடுங்கள். *(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷ்னல் 8 -14 ஜூலை 2005 பக்கம் 3)*

**காஸி (தீர்ப்பு வழங்குபவர்)**

நம்மிடம் உள்ளூர் அளவிலும் மேலிட அளவிலும் ஜமாஅத் அளவிலும் கஸாவின் ஓர் அமைப்பு இருக்கிறது.

எனவே கஸாவின் விவகாரங்களிலும் ஒவ்வொரு காஸியும் (தீர்ப்பளிப்பவரும்) விருப்பு வெறுப்பின்றி துஆ செய்து விவகாரத்தை ஆரம்பிக்க வேண்டும். *(ஜூமுஆ பேருரை 05.12.2003)*

அல்லாஹ் எல்லா பொறுப்பாளர்களுக்கும் தமது பொறுப்புகளைப் புரிவதற்கான, நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

✸✸✸ ✸✸✸ ✸✸✸

# மாவட்ட அமீர்மார்களின் கடமைகளும் பொறுப்புகளும்

1. மாவட்டத்திலுள்ள எல்லா ஜமாஅத்துகளின்புள்ளி விபரங்களைப் பற்றிய Update-ம் செயற்குழுவின் அட்டவணையும் மாவட்ட அமீரிடம் இருப்பது கட்டாயமாகும்.

2. மாவட்ட அமீருக்கு ஓர் அலுவலகம் இருக்க வேண்டும். அங்கு கணினி/அச்சுப் பொறி (Printer) வசதியும் மாவட்ட உறுப்பினர்களுக்காக தத்தமது துறைகளின் கோப்புகளும் இருக்க வேண்டும். அவற்றை அவர் ஆய்வு செய்து மேலிடத்தின் வழிகாட்டலின் ஒளியில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். எவரிடம் கணினி/அச்சுப் பொறி (Printer) இல்லையோ அவர் நஸாரத் உல்யாவிடம் தனது விவகாரத்தை அனுப்ப வேண்டும்.

3. மேலிடத்தின் எல்லா நஸாரத்துகளிடமிருந்து வரும் வழிகாட்டல்களின்படி எந்த அளவுக்கு செயல்பாடு இருக்கிறது என்பதை ஆய்வு செய்து கொண்டிருப்பது மாவட்ட அமீர் மற்றும் (மாவட்ட) செயற்குழு உறுபினர்களின் பொறுப்பாகும்.

4. எல்லா ஜமாஅத்துகளிலிருந்தும் தலைவர்களின் மாதாந்திர அறிக்கை முறைப்படி அனுப்ப ஏற்பாடு செய்வது.

5. மாவட்ட அமீரின் மாதாந்திர அறிக்கையை நியமிக்கப்பட்ட மாதாந்திர படிவத்தில் நிரப்பி அனுப்புவது.

6. ஒவ்வொரு மாதமும் ஒரு மாவட்ட கூட்டம் கண்டிப்பாக வைக்க வேண்டும்.

7. தற்காலிக உதவி/திருமண உதவி/சிகிச்சைக்கான உதவி மற்றும் வறியோருக்கான உதவி ஆகியவற்றிக்காக தேவைக்கேற்ப தேவைப்படும் சகோதரர்களின் விண்ணப்பங்களை முறைப்படி கித்மத்தே கல்க் கமிட்டியின் தலைவருக்கு அனுப்புவது ஆகியவை.

8. மாவட்ட அளவில் குறைந்தது ஒரு படிப்பகம் கண்டிப்பாக நிறுவுங்கள்.

9. ஒவ்வொரு மாதமும் மாவட்ட அமீர் நேரடியாகவோ அல்லது அவரது பிரதிநிதியோ மாவட்ட ஜமாஅத்துகளுக்கு சுற்றுப் பயணம் செய்ய வேண்டும். கீழ்வரும் விஷயங்களைப் பற்றி குறிப்பாக ஆய்வு செய்ய வேண்டும்:

✸ ஹுஸூர் அவர்களிடமிருந்து வந்த நான்கு அடிப்படையான வழிகாட்டல்களின்படி செயல்பட்டது பற்றி ஆய்வு செய்யுங்கள். *(நஸாரத் உல்யா சுற்றறிக்கை எண்:11/19.08.2015)*

✸ கட்டாயச் சந்தாக்கள், தஹ்ரீகே ஜதீது, வக்ஃபே ஜதீது ஆகியவற்றின் நிதி அறிக்கைகளை (பட்ஜெட்டுகளை) ஆயத்தம் செய்து மேலிடத்திற்கு அனுப்பப்பட்டு விட்டனவா? இல்லையா? என ஆய்வு செய்யுங்கள். வசூலிப்பது, அதிகப்படுத்துவது தொடர்பாக குறிப்பான கவனம் செலுத்துவது ஆகியவை.

✸ வாகிஃபீனே நவ், வாக்கிஃபாத்தே நவ் தொடர்பாக ஆய்வு செய்வது.

✸ காதியான் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயில்வதற்காகவக்ஃப்செய்தமாணவர்களைகாதியானுக்கு அனுப்புவதற்காக தூண்டுவதும் முயற்சி செய்வதும்.

✸ தஃலீமுல் குர்ஆன் வகுப்புகளுக்கான ஏற்பாடு செய்வது. வக்ஃபே ஆர்ஸி திட்டத்தில் கலந்து கொள்வதற்காக தூண்டுவதும் முயற்சி செய்வதும்.

✸ தஃவத்தே இலல்லாஹ் (அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்தல்) தொடர்பாக அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவர்களை ஆயத்தம் செய்வதும் அவர்களை சுறுசுறுப்பாக்குவதும்.

✸ ஜமாஅத்துகளில் பள்ளிவாயில்கள்/கொள்கை பரப்பு நிலையங்களின் நிலைமை என்ன? பத்திரப் பதிவின் அசல் பத்திரங்கள் மேலிடத்திலுள்ள நஸாமத் ஜாயிதாதுக்கு அனுப்பப்பட்டுள்ளனவா? இல்லையா? பள்ளிவாயில் அல்லது கொள்கை பரப்பு நிலையம் இல்லை என்றால் அதை கட்டுவதற்கு என்ன திட்டம் இருக்கிறது?

✸ ஜமாஅத் சகோதரர்களின் பிரச்சனைகள், ஒருவருக்கொருவருடன் இருக்கும் சண்டைகள் ஆகியவற்றை சீர்திருத்துவதற்காக இஸ்லாஹீ கமிட்டி (சீர்திருத்தக் குழு) என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது? சீர்திருத்தக் குழுவை சுறுசுறுப்பாக்குவதற்கு முயற்சி

செய்வது, வஸிய்யத் செய்தவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதற்காக நடவடிக்கை எடுப்பது, திருமண உறவு தொடர்பான முயற்சியை ஆய்வு செய்து கொண்டிருப்பது ஆகியவை.

✸ மஜ்லிஸே ஷூராவின் தீர்மானங்கள் செயல்படுத்தப்படுகிறதா? என்பதைப் பற்றி ஆய்வு செய்தவாறு வழிகாட்டலுக்கேற்ப சம்பந்தப்பட்ட நஸாரத்துக்கு காலாண்டு அறிக்கை அனுப்புவது.

✸ ஜமாஅத்தின் பொறுப்பாளர்களின் பணி தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃஃத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களிடமிருந்து கீழ்வரும் வழிகாட்டல் கிடைத்துள்ளது:

''ஜமாஅத்தின் எல்லா அமீர்மார்களும்/தலைவர்களும் கோப்புகளை (ஃஃபைல்களை) உருவாக்குங்கள். எந்த தலைவர்/அமீர் சார்பாக மூன்று நான்குமுறை நினைவூட்டிய பிறகும் மாதாந்திர அறிக்கை கிடைக்கவில்லை என்றால், அவர்கள் அது பற்றி தனது எந்த விளக்கமும் அல்லது மேலிடத்தின் கடிதத்திற்கு பதில் அளிப்பதில்லை என்றால், அப்படிப்பட்ட ஜமாஅத் தலைவர்/அமீரின் விவகாரத்தை இனிமேல் மர்கஸீ இன்திகாபீ கமிட்டி (மேலிட தேர்ந்தெடுப்புக் குழு)-ல் வையுங்கள். மர்கஸீ இன்திகாபீ கமிட்டி அந்த ஜமாஅத் தலைவர்/அமீரை மாற்றுவது தொடர்பாக முழு விபரத்தையும் ஆய்வு செய்து தனது ஒட்டுமொத்தமான அறிக்கையை இங்கு வழிகாட்டலுக்காகவும் ஒப்புதலுக்காகவும் அனுப்ப வேண்டும். ஒப்புதலுக்குப் பிறகு அந்த தலைவர்/அமீருக்கு பதிலாக இன்னொரு தலைவர்/அமீர் நியமிப்பதற்கான/தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை வழக்கப்படி நடைபெறும்.

அப்படிப்பட்ட எல்லா தலைவர்கள், அமீர்மார்களுக்கு குறிப்பாக கவனம் மூட்டுங்கள். அதாவது இனிமேல் இந்த வழிகாட்டல்தான். நீங்கள் உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுங்கள். உங்கள் ஜமாஅத்தின் மாதாந்திர அறிக்கைகளை குறித்த நேரத்தில் உடனுக்குடன் அனுப்பி வையுங்கள். இல்லையென்றால் உங்களுக்கு எதிராக இந்த வழிகாட்டலின் ஒளியில் இந்த நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாகி விடும். **பொறுப்புகளை வாங்கி**

**அமர்ந்திருப்பது பெரிய விஷயமன்று. உண்மையான விஷயம் அந்த பதவியின், பொறுப்பின் உரிமையை நிறைவேற்றுவதாகும்."** (QND *கடித எண்: 7196/04.05.2013)*

✵✵✵ ✵✵✵ ✵✵✵

# பொறுப்பாளர்களுக்கு பொன்னான அறிவுரைகள்

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் கட்டளைகள்)

**இறையச்சம்**

''பொறுப்பாளராக இருக்கின்றீர்கள் என்ற நிலையில் உங்களின் கடமை என்னவெனில், இறையச்சத்தின் விளக்கை உயர்த்தி வையுங்கள். இருளில் மற்றவர்களுக்கு வழிகாட்டுங்கள். இவ்வாறு மற்றவர்களுக்காக வழியை ஒளிமயமாக்குவதற்காக உங்களின் செயல்படும்முறை ஒரு முன்மாதிரியாகவும் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்பவும் இருப்பது அவசியமாகும்.'' *(07.12.2016 அன்று ரெஃப்ரஷர் கோர்ஸில் ஆற்றிய உரை)*

**பணிவு**

''பிறகு பொறுப்பாளர்களிடம் குறிப்பாக இருக்க வேண்டிய இன்னொரு பண்பு பணிவு ஆகும். அல்லாஹ், அருளாளனின் அடியார்களுடைய பண்பாக,

يَمْشُوْنَ عَلَى الْاَرْضِ هَوْنًا

அவர்கள் பூமியில் நடக்கும்போது பணிவுடன் நடப்பார்கள் என்று கூறியிருக்கிறான். *(திருக்குர்ஆன் 25:64)* எனவே இதற்கான மிக உயரிய முன்மாதிரியும் நமது பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டும். ஒருவரிடம் எந்த அளவுக்கு உயர்ந்த பதவி இருக்கிறதோ அந்த அளவுக்கு அதிகமாக தொண்டு செய்யும் உணர்வுடனும் மக்களுடன் சந்திப்பதைப் பொருத்தவரையிலும் பணிவைக் காட்ட வேண்டும். மேலும் இதுவே பெருந்தன்மையாகும். எந்த அஹ்மதிகளிடம் ஏதாவது பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அல்லது எவர்களுக்கு ஜமாஅத் உறுப்பினர்களின் நல்லொழுக்க, ஆன்மீக தர்பிய்யத்திற்கான பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் ஆணவத்திற்கு இரையாகி விட்டால், தம்மைத் தாமே ஏதாவது ஒரு வகையில் மற்றவர்களை விட பெரியவர்களாகக் கருதினால் அவர்கள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.'' *(ஜுமுஆ பேருரை 15.07.2016)*

## வீடுகளில் பொறுப்பாளர்களைப் பற்றி எதிர்மறையான விஷயங்களைக் கூறாதீர்கள்

‘‘அவ்வாறே பொறுப்பாளர்களுக்கும் முரப்பிகளுக்கும் நான் இந்த விஷயத்தையும் புரிய வைக்க விரும்புகிறேன். ஜமாஅத் சகோதரர்களின் வீடுகளில் பொறுப்பாளர்களைப் பற்றிய விஷயங்கள் - அதாவது எதிர்மறையான விஷயங்கள் இருக்க வேண்டாம் என நாம் அவர்களிடம் எதிர்பார்க்கும்போது தலைவர்களும், அமீர்மார்களும், முரப்பிகளும் தமது வீடுகளிலும் ஒருவர் மற்றவரைப் பற்றி எந்தவிதமான எதிர்மறையான விஷயங்களும் இருக்கக் கூடாது என்பதில் எப்போதும் கட்டுப்பாட்டுடன் இருங்கள். ஆயினும் முரப்பிமார்களின் சந்ததிகளிலும், பொறுப்பாளர்களின் சந்ததிகளிலும், ஜமாஅத் அமைப்பு, வாழ்வை அர்ப்பணித்தவர்கள் மற்றும் ஜமாஅத்திற்கு எந்த வகையில் தொண்டு செய்பவர்களாக இருந்தாலும் அவர்களைப் பற்றிய கண்ணியம் உருவாவதற்காக நேர்மறையான விஷயங்களை தாராளமாகக் கூறுங்கள்.’’ *(ஜும்ஆ பேருரை 10.03.2017)*

## தமக்குக் கீழ் இருப்பவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள்

‘‘பொறுப்பாளர்களுக்கு இன்னொரு சிறப்பம்சம் இதுவும் இருக்க வேண்டும். அதாவது அவர்கள் தமக்குக் கீழ் இருப்பவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்.........ஜமாஅத்தின் பெரும்பாலான பணிகள் தன்னார்வத்தால் நடைபெறுகின்றன. ஜமாஅத் உறுப்பினர்கள் ஜமாஅத்தின் பணிகளுக்காக நேரத்தை செலவிடுகின்றனர். அவர்கள் இறைவனின் திருப்தியைப் பெற விரும்புவதால் அவர்கள் நேரத்தைக் கொடுக்கின்றனர். அவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பு இருக்கிறது; அன்பு இருக்கிறது. அதனால் அவர்கள் நேரத்தைக் கொடுக்கின்றனர். எனவே பொறுப்பாளர்களும் தமது பணிகளை செய்பவர்களின் உணர்வுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும். மேலும் இதுவே அல்லாஹ்வின் கட்டளையுமாகும். ஜமாஅத்தின் பணிகளை மிகச் சிறந்த முறையில் செய்வதற்காக எப்போதும் பணியாளர்கள் கிடைத்துக் கொண்டிருக்கும் வகையில் இந்த அழகிய முறையில் நடந்து கொள்வதுடன் தனது

துணைச் செயலர்கள், கீழ் பணிபுரிபவர்கள் ஆகியோருக்கு பணியை கற்றுக் கொடுப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.'' *(ஜுமுஆ பேருரை 15.07.2016)*

''அமீர்மார்கள், பொறுப்பாளர்கள் அல்லது மேலிட பணியாளர்கள் தமக்குக் கீழ் எந்த பணியாளர்கள் கண்காணிப்பாளர்களாக ஆக்கப்பட்டுள்ளார்களோ அவர்கள் நல்ல இயல்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும் எனவும், ஜமாஅத்துக்கு கட்டுப்பட்டு நடக்கும் ஆன்மா அவர்களிடம் இருக்க வேண்டும் எனவும், அவர்களிடம் ஜமாஅத் அமைப்பிற்கான கண்ணியம் இருக்க வேண்டும் எனவும் துஆ செய்யுங்கள்.'' *(ஜுமுஆ பேருரை 05.12.2003)*

## புன்சிரிப்புடனும் நல்லொழுக்கத்துடனும் நடந்து கொள்வது

''பிறகு பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய இன்னொரு பண்பு புன்சிரிப்புடனும், நல்லொழுக்கத்துடனும் நடந்து கொள்வதாகும்.

وَقُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا

மக்களுடன் மென்மையாகப் பேசுங்கள்; அவர்களுடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.(திருக்குர்ஆன் 2:84) எனவே இதுவும் பொறுப்பாளர்களிடம் அதிகமாக இருக்க வேண்டிய ஓர் அடிப்படையான நல்லொழுக்கமாகும். தனது கீழே உள்ளவர்களிடமும், தன்னுடன் வேலை செய்பவர்களுடனும், மற்றவர்களுடனும் பேசும்போதெல்லாம் தமது உயர்ந்த ஒழுக்கங்கள் வெளிப்பட வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.'' *(ஜுமுஆ பேருரை 15.07.2016)*

## காலத்தின் கலீஃபாவின் தீர்மானங்களை செயல்படுத்துவது

அமீர்மார்களுக்கும், தலைமையக பொறுப்பாளர்களுக்கும் நான் கூறுவதாவது, ஜமாஅத்தின் ஒத்துழைப்பு மற்றும் கட்டுப்படுதலின் தகுதி உயர வேண்டும் என அவர்கள் விரும்பினால் இதயத் துடிப்புடன் நாடித்துடிப்பு இயங்குவது போன்று காலத்தின் கலீஃபாவின் தீர்ப்புகளை செயல்படுத்துங்கள். இந்தத் தகுதியைப்

பெற்றுவிட்டால் ஒரு சாதாரண அஹ்மதி எவ்வாறு கட்டுப்படுகிறார் என்று பிறகு பாருங்கள். *(ஜுமுஆ பேருரை 09.06.2006)*

### சட்டதிட்டங்கள் பற்றி அறிந்திருப்பது

''சட்டதிட்டங்கள் பற்றிய நூலை ஒவ்வொரு பொறுப்பாளரும் பார்க்க வேண்டும். மேலும் தனது துறைக்கான பணிகளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொருவருக்கும் தமது வரையறை தெரிந்திருக்க வேண்டும். சில நேரத்தில் பொறுப்பாளர்களுக்கு தமது வரையறைகள் கூட தெரிவதில்லை. ஒரு துறை ஒரு வேலையை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்த வேலையோ இன்னொரு துறையில் எழுதப்பட்டுள்ளது. அல்லது சில நேரத்தில் வேலைகளைப் பற்றி நுணுக்கமான வித்தியாசம் இருக்கிறது. அதை கவனிக்காமல் இரண்டு துறைகள் ஒன்று மற்றொன்றின் வரையறைக்குள் நுழைந்து விடுகின்றன.'' *(ஜுமுஆ பேருரை 15.07.2016)*

### மேலிடத்தின் வழிகாட்டல்களின்படி செயல்படுவது

''பிறகு அமீர்மார்கள், தலைவர்கள், ஜமாஅத் செயலர்களின் இன்னொரு முக்கியமான பணி, மேலிடத்திலிருந்து வரும் வழிகாட்டல்கள் அல்லது சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் மீது உடனடியாகவும் முழுமையாகவும் கவனம் செலுத்தி செயல்படுத்துங்கள். உங்கள் ஜமாஅத்துகளின் மூலமாகவும் செயல்பட வையுங்கள். மேலிடத்தின் வழிகாட்டல்களின்படி முழுமையான முறையில் செயல்படுத்தப்படுவதில்லை என சில ஜமாஅத்துகளைப் பற்றி முறையீடுகள் வருகின்றன. ஏதாவது வழிகாட்டலைப் பற்றி ஏதாவது குறிப்பிட்ட நாட்டிற்கு அல்லது ஜமாஅத்திற்கு நாட்டின் நிலைமைகளின் காரணமாக ஏதாவது பாதுகாப்பு தேவை இருக்குமென்றால்உடனேமேலிடத்தில்தொடர்புகொண்டு நிலைமைகளுக்கேற்ப அதில் மாறுதலை ஏற்படுத்த விண்ணப்பிக்க வேண்டும். **மேலும் இந்த வேலை அமீர் மற்றும் தலைவருக்குரியதாகும். ஆனால் தனது மூளையை பயன்படுத்தி அந்த வழிகாட்டலை ஒருபுறம் அமுக்கி வைத்து விட்டு அதன்படி செயல்படாமலிருப்பதும் மேலிடத்திற்கு தகவல் தராதிருப்பதும் எவ்வகையிலும் பொருத்தமானதல்ல.** அமீர், தலைவரின் இந்த செயல் மேலிடத்தை புறக்கணித்த

செயலாகக் கருதப்படும். இது தொடர்பாக பின்னர் மேலிடம் நடவடிக்கையும் எடுக்கலாம்.'' *(ஜுமுஆபேருரை 15.07.2016)*

## முபல்லிக்மார்களுக்கு மரியாதை செலுத்துவதும் கண்ணியமளிப்பதும்

தலைவர், அமீர் மற்றும் ஜமாஅத்தின் அனைத்து பொறுப்பாளர்களின் பணி - இன்னும் கூறுவதென்றால் அவர்களின் பொறுப்பு என்னவெனில், **முபல்லிக்மார்கள் - இன்னும் கூறுவதாயிருந்தால் வாழ்க்கையை அர்ப்பணித்த அனைவரின் மரியாதையையும், கண்ணியத்தையும் தமது உள்ளங்களிலும் உருவாக்க வேண்டும்; ஜமாஅத்தின் உறுப்பினர்களின் உள்ளங்களிலும் உருவாக்க வேண்டும்.** முரப்பி, முபல்லிக், வாழ்வை அர்ப்பணித்தவர் ஆகியோரின் முக்கியத்துவம் தெளிவாவதற்காகவும், அதிகமதிகமான இளைஞர்கள் ஜமாஅத்தின் தொண்டிற்காக தம்மை எடுத்து வைப்பதற்காகவும் அவர்களுக்கு மதிப்பளிப்பதும், மதிப்பளிக்க வைப்பதும் உங்களின் வேலையாகும்.''

மேலும் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

''**தலைவர்கள்/அமீர்மார்களிடமும் நான் கூறுகிறேன். முரப்பிகளின் மரியாதையையும், கண்ணியத்தையும் நிலைநாட்டுவது அவர்களின் வேலையாகும்.** எந்தவொரு ஜமாஅத்திலும் ஜமாஅத்திலேயே அனைவரையும் விட அதிகமாக முரப்பிக்கு மதிப்பு, கண்ணியம் வழங்குபவர், ஒத்துழைப்பு வழங்குபவர், ஆலோசனையுடன் நடப்பவர் ஜமாஅத் தலைவரும் ஜமாஅத் அமீருமே இருக்க வேண்டும். அவ்வாறே **மற்ற பொறுப்பாளர்களும் தத்தமது வட்டத்தில் முரப்பியுடன் ஒத்துழைப்பு வழங்குபவர்களாக இருக்க வேண்டும்.**'' *(ஜுமுஆ பேருரை 10.03.2017)*

## வரையறைகள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பான வழிகாட்டல்

''நமது நோக்கம் ஒன்றே ஆகும். அதாவது, ஜமாஅத் உறுப்பினர்களுக்கு கல்வி, ஒழுக்கப் பயிற்சி கொடுப்பது ஜமாஅத் அமைப்பின் கண்ணியத்தை நிலைநாட்டுவது, கிலாஃபத்துடன் தொடர்பு கொள்வது, ஏகத்துவத்தை நிலைநாட்டுவது, இஸ்லாத்தின் உண்மையான

போதனைகளை உலகில் பரப்புவது ஆகியவை. **எனவே இதில் வரையறைகள் அதிகாரங்கள் என்ற பேச்சுக்கு எங்கு இடமிருக்கிறது? ஒருவருக்கொருவர் ஒன்றாக இருந்து வேலை செய்ய வேண்டும்.** இது தொடர்பாக,

وَتَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى

'நன்மையான விஷயங்களிலும், இறையச்சம் கொண்ட விஷயங்களிலும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்குங்கள்' என்ற அடிப்படையான கட்டளையை முன்னால் வைக்க வேண்டும். *(திருக்குர்ஆன் 5:3)* ஜமாஅத்தின் தொண்டு - அது எந்த வகையில் செய்ய நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருந்தாலும் அதை விட பெரிய எந்த நன்மையும் இல்லை. மேலும் தொண்டு செய்வதற்கு இறையச்சமும் தேவையாகும்.'' *(ஜுமுஆ பேருரை 10.03.2017)*

### ஜமாஅத் தலைவர் அல்லது அமீரின் பொறுப்பு

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பொறுப்பாளர்கள் தமது முன்மாதிரியை நிலைநாட்டும்படி அறிவுரை கூறியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

''**அமீர்மார்கள், தலைவர்கள் முதன் முதலில் தனது செயற்குழுவிற்கு முன்னாலும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு முன்னாலும் தனது முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.** தர்பிய்யத் செயலர்கள் இருக்கின்றனர். அவர்களிடம் தர்பிய்யத்திற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் முன்மாதிரி நிலைபெறும்போதுதான் தர்பிய்யத்தின் வேலை சரியான முறையில் நடைபெற முடியும். **எவர் பணி செய்பவராக இருக்கின்றாரோ, எவருக்கு பொறுப்பு இருக்கின்றதோ, எவர் மற்றவருக்கு அறிவுரை கூறுபவராக இருக்கின்றாரோ அவர் தாமும் அந்த வேலைகளைச் செய்பவராக இருக்க வேண்டும்.** எனவே தர்பிய்யத் செயலர்களும் ஜமாஅத் சகோதரர்களுக்கு முன்னால் தமது முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். ஜமாஅத்தின் தர்பிய்யத்திற்கான பொறுப்பு அவர்களிடம் இருக்கிறது. *(ஜுமுஆ பேருரை 15.07.2016)*

கிலாஃபத் அமைப்பு மற்றும் ஜமாஅத்தின் அமைப்பு ஆகியவற்றைப் பற்றி விளக்கிக் கூறியவாறு ஹஸ்ரத்

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

''அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பை ஏற்படுத்தி இருப்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது அவன் செய்திருக்கும் மாபெரும் பேரருளாகும். இந்த கிலாஃபத்தின் அமைப்பைச் சுற்றி ஊர் அளவில் அல்லது சிறிதினும் சிறிய கிராமத்திலிருந்து நகரம் மற்றும் நாடு தழுவிய அளவில் ஜமாஅத்தின் அமைப்பு சுற்றிக் கொண்டிருக்கிறது. அதாவது,

ஏதாவது சிறிதினும் சிறிய ஜமாஅத்தின் தலைவரிலிருந்து அமீர் வரை நேரடியாக அல்லது நேரடி அல்லாத தொடர்பு காலத்தின் கலீஃபாவுடன் இருக்கிறது. பிறகு ஒவ்வொரு நபரும் தனிப்பட்ட முறையிலும் தொடர்பு கொள்ள முடியும். ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் காலத்தின் கலீஃபாவுடன் தொடர்பு வைக்கின்றார்.'' *(ஜும்ஆ பேருரை 31.12.2004)*

## பொறுமை மற்றும் சகிப்புத்தன்மை

''**ஒவ்வொரு பொறுப்பாளரும் இன்னொரு விஷயத்தையும் நினைவில் கொள்ளவேண்டும். தனக்கு எதிராகவே எவராவது ஒருவருடைய முறையீடு இருந்தாலும், எந்த பொறுப்பாளருக்கு எதிராக அவருக்கு முறையீடு இருந்தாலும் அல்லது அவருக்கு எதிராக அவருக்கு முறையீடு வந்தாலும் அல்லது அவருக்கு எதிராக எவராவது அவருக்கு முன்னால் ஏதாவதொரு விஷயத்தைக் கூறினாலும் அதைக் கேட்பதற்கான தைரியம் இருக்கவேண்டும்.** பொறுப்பாளர்களிடம் அனைவரையும் விட அதிகமான சகிப்புத்தன்மை இருக்க வேண்டும். பேசுபவர்களிடம் பழிவாங்குவதற்கு பதிலாக முதலில் தன்னை சீர்திருத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். என்னிடம் இந்த தீமை இல்லையே! இவர் சரியாகக் கூறுகிறாரா? உண்மையைக் கூறுகிறாரா? என தன்னைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். இந்த விஷயமும் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகும்.'' *(ஜும்ஆ பேருரை 10.03.2017)*

''ஜமாஅத் அமைப்புக்குக் கட்டுப்படுவது மற்றும் அதனுடன் தொடர்பு கொண்டவர்களாக இருப்பதிலேயே

எப்போதும் அருள் இருக்கிறது என்பதை எப்போதும் மனதில் வைக்க வேண்டும். எனவே ஒருவருக்கு எதிராக தவறான தீர்ப்பு ஆகிவிடுகிறதென்றால் நான் கூறியது போன்று பொறுமையைக் காட்ட வேண்டும். பொறுமையற்ற நிலையை வெளிப்படுத்தக் கூடாது.'' *(ஜுமுஆ பேருரை 05.12.2003)*

## ஜமாஅத்தின் பொறுப்பாளர் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதி ஆவார்

''அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பொறுப்பாளர்கள் **மேடைகளில் அமர்வதற்காகவோ அல்லது ஆணவத்தால் திரிவதற்காகவோ** உருவாக்கப்படுவதில்லை. மாறாக, **சமுதாயத்தின் தலைவர் சமுதாயத்தின் தொண்டர்** ஆவார் என்ற சிந்தனையில் உருவாக்கப்படுகிறார்கள்..........நாம் நமது எஜமானர் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு மிகவும் அதிகமாக பணிவுடனும், தன்னடக்கத்துடனும், அன்புடனும், நேசத்துடனும் மக்களுடன் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் காலத்தின் கலீஃஃபா ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும் அல்லது ஒவ்வொரு ஊரிலும் சென்று மக்களின் நிலைமைகளை அறிவது கடினமாகும். நான் கூறியது போன்று இப்போது ஜமாஅத் அமைப்பு அல்லாஹ்வின் அருளினால் மிகவும் உறுதியான அடிப்படையில் நிலைபெற்று விட்டது. கிளை அமைப்புகளின் பொறுப்பாளர்களாக இருந்தாலும், ஜமாஅத் பொறுப்பாளர்களாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் காலத்தின் கலீஃஃபாவின் பிரதிநிதிகளாக தத்தமது ஊர்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் காலத்தின் கலீஃஃபாவின் பிரதிநிதி என்றே அவர்கள் மீது நம்பிக்கை வைக்கப்படுகிறது; இந்த சிந்தனையே இருக்கிறது.

**அவர்கள் தமது ஊரிலுள்ள அஹ்மதிகளின் உரிமைகளை நிறைவேற்றவில்லை என்றால்,** அவர்களின் சுகதுக்கங்களில் கலந்து கொள்ளவில்லை என்றால், அவர்களுடன் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொள்ளவில்லை என்றால் அல்லது காலத்தின் கலீஃஃபாவின் சார்பாக ஏதாவது விவகாரத்தில் அறிக்கை கேட்கப்படும்போது ஆய்வு செய்யாமல் முழுமையான வழிமுறைக்கேற்றபடியான பதிலை வழங்கி விடுகிறார்கள் என்றால் அல்லது நமது எந்த பொறுப்பாளரிடமாவது - அல்லாஹ்

காப்பானாக - **சொந்த பகைமை இருந்து அதன் காரணமாக தவறான அறிக்கையை கொடுத்து விடுகிறார்கள் என்றால் அப்படிப்பட்ட எல்லா பொறுப்பாளர்களும் பாவிகளாவார்கள்.**'' *(ஜுமுஆ பேருரை 05.12.2003)*

## ஜமாஅத்தின் செல்வங்களை எச்சரிக்கையாக செலவு செய்வது

''பிறகு பொறுப்பாளர்களின் ஒரு சிறப்புத்தன்மை இதுவும் இருக்க வேண்டும். ஜமாஅத்தின் செல்வங்களை மிகவும் எச்சரிக்கையாக செலவு செய்ய வேண்டும். எந்த வகையிலும் வீண் செலவு ஆகக் கூடாது. எனவே எந்தத் துறைகளுக்கு அதிக செலவினங்கள் இருக்கின்றனவோ அவர்களின் நிதி நிலையும் அதிகமாக இருக்கின்றதோ அவர்கள் தமது நிதிநிலையை மட்டுமே பார்க்கக் கூடாது. மாறாக, குறைந்த செலவில் எவ்வாறு அதிகமாக பயன்பெற முடியும் என முயற்சி செய்ய வேண்டும்.............எனவே அமீர்மார்கள் மற்றும் பொறுப்பாளர்கள் இந்த விஷயத்தை குறிப்பாக கவனத்தில் கொள்ளுங்கள்.'' *(ஜுமுஆ பேருரை 12.04.2013)*

## தீர்மானம் எடுப்பதற்கான வழிமுறை

''தீர்மானம் எடுக்கும்போது, காலத்தின் கலீஃபாவுக்கு பரிந்துரை செய்யும்போது எல்லாவிதமான உறவுகளுக்கும் அப்பாற்பட்டு பரிந்துரை செய்யுங்கள். ஏதாவது செயல்பாட்டில் உடனே கோபம் வந்தால் பிறகு எந்தவிதமான ஒருதலைப்பட்சமான கருத்தும் இல்லாதிருக்கும் பொருட்டு இரண்டு நாள் தாமதித்து பரிந்துரை செய்ய வேண்டும்.'' *(ஜுமுஆ பேருரை 10.11.2006)*

## வஸிய்யத் அமைப்பில் கலந்து கொள்ளுதல்

''செயற்குழுவிலுள்ள எந்த உறுப்பினர்கள் இன்னும் வஸிய்யத் செய்யவில்லையோ அவர்கள் முதலில் வஸிய்யத் அமைப்பில் சேர வேண்டும். பிறகு மற்றவர்களை இந்த அமைப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள்.'' *(அல்ஃபஸ்ல் 18.05.2005 பக்கம் 3)*

## தண்டனை கொடுக்கப்பட்ட நபர்களை சீர்திருத்துவதற்கான வழிமுறை

''இந்த தண்டனை கிடைக்கும்போது தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாதவர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள்

தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்; இதில் அருள் இருக்கிறது என்பதில் அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பதிலாக, இவ்வாறு கூறுவதற்கு பதிலாக அவர்களுக்கு தகாத உதவி செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். **இவ்வாறு தகாத உதவியினால் தண்டனை பெற்றவருக்கு சீர்திருத்தம் ஏற்பட முடியாது. எனக்கு இன்னும் ஒரு கூட்டம் இருக்கிறது. உறவினர் இருக்கின்றனர். அவர்கள் என்னை தவறாக கருதவில்லை.** எந்த சமூகத்தில் நான் எழுகின்றேனோ, அமர்கின்றேனோ அங்கு இது தவறாக கருதப்படுவதில்லை என அவர் நினைக்கிறார். **பிறகு அவருக்கு சீர்திருத்தம் ஏற்படுவதில்லை. அல்லது சீர்திருத்தம் ஏற்படுகிறதென்றால் மிக நீண்ட காலம் தேவைப்படுகிறது.** இந்த வகையில் சீர்திருத்தம் என்றால் முழு சமூகத்திற்கும் கட்டளையாகும். ஒருவருக்கு எதிராக தண்டனை கொடுக்கப்பட்டிருக்கும்போது முழு சமூகமும் அவர் மீது அழுத்தம் கொடுக்க வேண்டுமே தவிர தகாத உதவி செய்யக் கூடாது என முழு சமூகத்திற்கும் கட்டளையாகும்.'' *(ஜுமுஆ பேருரை 17.09.2004)*

### பொறுப்பாளர்களுக்கு தாடி இருக்க வேண்டும்

''பொறுப்பாளர்களுக்கு கொஞ்சம் தனது வெளிப்படையான தோற்றத்தையும் உருவாக்க வேண்டும். குறைந்தது கொஞ்சம் தாடியாவது இருக்க வேண்டும். இஸ்லாமிய அடையாளத்தின் பக்கம் இவருக்கு கொஞ்சமாவது சிந்தனை இருக்கிறது என்ற உணர்வாவது மக்களுக்கு இருக்கும்.''

''ஜமாஅத் தலைவருக்கு தாடி வைப்பது மிகவும் அவசியமாகும்..........எவருக்காவது ஏதாவது நோய் அல்லது ஒவ்வாமை இருந்தால் ஸீரோ நம்பர் மெஷினையாவது பயன்படுத்தட்டும். எந்நிலையிலும் பொறுப்பாளர்களுக்கு தாடி இருக்க வேண்டும். இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள்.'' *(ஸ்பெயினில் நடைபெற்ற நாடு தழுவிய செயற்குழுக் கூட்டம். அல்ஃபஸ்ல் நாளிதழ் 29.04.2013)*

### ஜமாஅத் அமைப்பிற்கான கண்ணியத்தை உருவாக்குவது

''அமீர்மார்கள், தலைவர்கள், பொறுப்பாளர்கள் அல்லது பணியாளர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தம்மிடத்திலும், மக்களிடத்திலும் ஜமாஅத் அமைப்பின் கண்ணியத்தை உருவாக்குவது அவர்களின் அசல் பணியாகும். அவ்வாறே

ஜமாஅத்தின் எல்லா உறுப்பினர்களும் தம்மிடமும் தமது சந்ததிகளிடமும் ஜமாஅத்தின் கண்ணியத்தை உருவாக்க வேண்டும்.'' *(ஜுமுஆ பேருரை 05.12.2003)*

**உயர் பொறுப்பாளர்களுக்குக் கட்டுப்படுவது**

''தம்மை விட உயர் பொறுப்பாளர்களுக்கு கண்ணியமளிப்பதும் அவர்களுக்குக் கட்டுப்படுவதும் மிகவும் அவசியமாகும். உங்களுக்கு உங்களை விட **உயர்ந்த பொறுப்பாளரிடமிருந்து ஏதாவது தொண்டு ஒப்படைக்கப்பட்டு உங்களுக்கு அவர் மீது ஏதாவது முறையீடு இருக்கிறதென்றால் முதலில் கட்டுப்பட்டவாறு அந்தப் பணியைச் செய்யுங்கள். பிறகு பொறுப்பாளரிடம் நீங்கள் இந்த வேலையை தவறாக செய்துள்ளீர்கள் என நான் மேலிடத்திற்கு அல்லது காலத்தின் கலீஃபாவுக்கு எழுதுவேன் எனக் கூறுங்கள்.**'' *(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷ்னல் 7.07.2006 பக்கம் 2)*

**(செயற்குழுக்) கூட்டங்களின் நடவடிக்கைகள் அமானிதங்களாகும்**

''உங்களின் (செயற்குழுக்) கூட்டங்கள், மஜ்லிஸுகள் ஆகியவற்றின் விஷயங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இது மிகவும் அடிப்படை விஷயமாகும். மஜ்லிஸுகளின் விஷயங்கள் அமானிதங்களாக இருக்கின்றன. எனவே அவற்றிக்கு மதிப்பளிக்க வேண்டும்.'' *(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷ்னல் 7.07.2006 பக்கம் 2)*

**இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''**உங்களில் எவராவது ஜமாஅத்தின் ஏதாவதொரு பணிக்காக நியமிக்கப்பட்டால் அவர் அதிலிருந்து விலகி ஓடுவது கடுமையான தவறு ஆகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.** நீங்கள் ஜமாஅத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் ஒருபோதும் குறைவைக்காதீர்கள். இன்னும் கூறுவதென்றால், அதை உங்களின் கண்ணியத்திற்குக் காரணமாகக் கருதுங்கள். **நீங்கள் இந்த ஜமாஅத்தின் பணிகளை கண்ணியத்திற்குரியதாகக் கருதுவீர்கள் என்றால், இறைவனும் உங்களை கண்ணியத்திற்குரிய வர்களாக ஆக்கிவிடுவான்**............அந்த கண்ணியம் வந்து விட்டால் எவர்கள் தமது காலத்தில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் குறைவைத்தார்களோ அவர்களின் சந்ததிகள் அந்த கண்ணியத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

எனவே இனிமேல் எச்சரிக்கையாக இருங்கள். எப்போதும் ஜமாஅத்தின் பணிகளை கண்ணியத்துடன் பாருங்கள். **உங்களில் ஒருவர் ஜமாஅத்தின் பணிக்காக நியமிக்கப்பட்டால் இறைவன் அவருக்கு மிகப்பெரிய பட்டத்தை வழங்கி இருக்கிறான் எனக் கருதிக் கொள்ளட்டும்.''** *(கிதாபாத்தே ஷூரா தொகுதி 3 பக்கம் 603)*

எனவே ஜமாஅத்தின் தொண்டுகளுக்கு மதிப்பளிக்காதிருப்பதும், காரணமின்றி பணி துறப்பிற்கான (ராஜினாமாவிற்கான) விண்ணப்பதை எடுத்து வைப்பதும் ஆகிய இந்த வழிமுறை விரும்பத்தகாததாகும். பிறகு அந்த நபர் இனிமேலும் தொண்டிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார்.

✱✱✱ ✱✱✱ ✱✱✱

## பல்வேறு சிறப்பான வழிகாட்டல்கள்

✸ எல்லா செயலர்களும் தத்தமது வட்டத்தில் உள்ளூர் அமீர்/தலைவரின் ஆலோசனையுடன் செயல்படுவது அவசியமாகும். மேலும் ஒவ்வொரு மாதமும் தனது துறையைச் சார்ந்த செயல்பாட்டின் அறிக்கையை அமீர்/தலைவர் அவர்களுக்கு எடுத்து வைத்து அதன் நகலை காதியான் மேலிடத்தின் சம்பந்தப்பட்ட நஸாரத்துகளுக்கும் துறைகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும். **எவ்வாறு ஒவ்வொரு ஜமாஅத்திலும் பொருளாளர் ஒரு சுறுசுறுப்புள்ள பங்கை வகிக்கின்றாரோ அவ்வாறே எல்லா பொறுப்பாளர்களும் சம்பந்தப்பட்ட நஸாரத்துகளின் வழிகாட்டல்களின் ஒளியில் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் அந்த பதவிகளின் உரிமை சரியான முறையில் நிறைவேற முடியும். மற்றபடி பொறுப்பை வாங்கிக் கொண்டு உட்கார்ந்து விடுவதும் எந்த செயல்பாட்டையும் செய்யாதிருப்பதும் அமானிதத்தில் நம்பிக்கை துரோகம் செய்யும் செயலாகி விடும்.** அல்லாஹ் எல்லா பொறுப்பாளர்களுக்கும் இந்த மாதிரியான நம்பிக்கை துரோகம் செய்வதிலிருந்தும் பாதுகாப்பானாக. ஆமீன்.

✸ ஜமாஅத்துகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கின்ற மேலிட நாஸிர்மார்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் ஹுஸூர் அவர்களின் அடிப்படையான வழிகாட்டல் என்னவெனில், அவர்கள் ஜமாஅத்துகளின் செயல்குழுவுடன் கூட்டத்தை நடத்த வேண்டும். மேலும் செயல்பாடுகளைப் பற்றி அலசி ஆராய்ந்து வழிகாட்ட வேண்டும். நஸாரத் உல்யா சார்பாக இதற்காக ஒரு படிவம் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. அதை மேலிட பிரதிநிதிகள் சுற்றுப் பயணங்களில் தம்முடன் வைத்துள்ளனர். மேலும் அதற்கேற்ப செயல்படுத்தி அவர்கள் அறிக்கை கொடுக்கின்றனர்.

✸ ஜமாஅத்தின் எல்லா பொறுப்பாளர்களின் கடமை என்னவெனில், ஜமாஅத்தின் பெயருக்கு அல்லது கண்ணியத்திற்கு களங்கம் ஏற்படுகின்ற அல்லது மேலிடத்தின் அமைப்புக்கு அவமதிப்பு ஏற்படுகின்ற

அல்லது எத்தகைய பொறுப்பை தாங்கிக் கொள்வதற்கு அவருக்கு ஆற்றல் இல்லையோ அப்படிப்பட்ட ஒரு பொறுப்பு விழுமென்றால் அல்லது ஜமாஅத்தின் ஏதாவது நோக்கத்தைப் பெறுவதற்குத் தடையாக இருக்கக் கூடிய அல்லது எதன் மூலமாக சோதனையும், குழப்பமும் உருவாகுவதற்கான அச்சம் இருக்கிறதோ அல்லது எதில் ஒருவருடைய உரிமை பறிக்கப்படுமோ அப்படிப்பட்ட எந்த செயலையும் செய்யக் கூடாது.

✸ எந்தவோர் அமீர், தலைவர் அல்லது பொறுப்பாளர் மேலிடத்தின் அனுமதியின்றி எந்தவோர் அரசியல் பதவிக்காக/தேர்தலுக்காக நிற்க முடியாது.

✸ ஜமாஅத்தின் எந்தவொரு பொறுப்பாளர் அல்லது ஜமாஅத்தின் உறுப்பினர் ஊடகங்களுக்கு முன்னால் ஜமாஅத்தின் கொள்கை பற்றி அனுமதியின்றி எந்த பேட்டியும் கொடுக்கக் கூடாது. ஆயினும் எந்த ஜமாஅத்தில் மேலிடத்தின் ஒப்புதலுடன் ஊடக செயலர் நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அவர்தான் பேட்டி கொடுக்க முடியும். அவ்வாறே எந்த பத்திரிகையிலும் அல்லது இதழிலும் கட்டுரைகள் அல்லது எந்தவொரு பிரஸ் ரிலீஸும் வெளியிட முடியாது. அதற்கு மேலிட பிரஸ் அன்டு மீடியா துறையிடமிருந்து அனுமதி வாங்குவது அவசியமாகும்.

✸ கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஒப்புதல் இன்றி சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் எந்தவோர் அசையும் சொத்தையோ அசையாத சொத்தையோ விலைக்கு விற்பதற்கோ அல்லது அன்பளிப்பாக வழங்குவதற்கோ அல்லது அடகு வைப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ எந்தவோர் உள்ளூர் ஜமாஅத்திற்கும் அதிகாரம் இல்லை.

✸ எந்தவொரு சந்தா தொகையையும் - அது உள்ளூர் சந்தாவாக இருந்தாலும் அல்லது வேறு எந்த நோக்கத்திற்காக பெறப்பட்டதாக இருந்தாலும் அதை மன்னிப்பதற்கு எந்தவோர் உள்ளூர் ஜமாஅத்திற்கும் அதிகாரம் இல்லை. எந்தவோர் உள்ளூர் ஜமாஅத்தின் தலைவர் அல்லது பொறுப்பாளர் எந்தவொரு நோக்கத்திற்காகவும் ஜமாஅத் உறுப்பினர்களிடமிருந்து அன்பளிப்பை வழங்குமாறு அறிவிக்க முடியாது. அதற்கு முதலில் நஸாரத் பைத்துல் மால் ஆமது அலுவலகத்திலிருந்து அனுமதி பெறுவது அவசியமாகும்.

★ உள்ளூர் ஜமாஅத்தின் உள்ளூர் செயற்குழுவில் ஏதாவது விவகாரம் (செயற்குழுவைச் சேர்ந்த) ஒருவருடைய சொந்த பிரச்சனை தொடர்பாக எடுத்து வைக்கப்படுமென்றால் அவர் அந்த நேர செயற்குழுக் கூட்டத்தில் இருக்கக் கூடாது. மேலும் அப்படிப்பட்டவர் அந்தக் குழுவின் தலைவராக இருந்தால் இந்த விவகாரத்திற்காக ஏற்கனவே இருக்கும் உறுப்பினர்களில் இன்னொருவரை கூட்டத் தலைவராகத் தேர்ந்தெடுத்து அந்த விவகாரம் எடுத்து வைக்கும் நேரத்தில் (நிரந்தத் தலைவராக இருக்கும்) அவர் கூட்டத்திலிருந்து வெளியே சென்று விட வேண்டும்.

★ செயற்குழு நடக்கும்போது ஏதாவது விவகாரம் தொடர்பாக என்ன பேச்சு வார்த்தை நடக்கிறதோ அல்லது என்ன கருத்து கூறப்படுகிறதோ அதை இரகசியமாக வைப்பது செயற்குழு உறுப்பினர்களின் கடமையாகும்.

★ எந்தவொரு செயலரும் தனது பிரதிநிதியை, தானே நியமிக்க முடியாது. அதற்காக அவர் உள்ளூர் அமீர்/தலைவர் அவர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

★ அமீர்மார்கள், தலைவர்கள், மாவட்ட அமீர்மார்கள் விடுப்பில் அல்லது ஏதாவது பணி நிமித்தமாக வெளியே செல்லும் நிலையில் அவர்களின் பிரதி நிதிகளை நியமிப்பது தொடர்பாக ஹுஸூர் அவர்களின் சார்பாக கீழ்வரும் அடிப்படையான வழிகாட்டல்கள் உள்ளன:

1. ஜமாஅத்தின் அமீர் மற்றும் மாவட்ட அமீர் உள்நாட்டில் ஒரு வார காலவரையறைக்கு விடுப்பில் செல்வதற்கான விண்ணப்பத்தை கொடுத்தால் அவருக்கு பிரதிநிதியாக ஒருவரை நாஸிர் அஃலா காதியான் நியமிக்கலாம். ஆயினும் ஒரு வாரத்தை விட அதிகமான காலத்திற்கு அவர் உள்நாட்டில் விடுப்பில் செல்வார் என்றால் அதற்கு காலத்தின் கலீஃபாவிடமிருந்து அனுமதி பெற வேண்டும். (அமீர், மாவட்ட அமீர் ஆகிய) இருவரும் வெளிநாட்டுக்கு விடுப்பில் செல்லும் நிலையில் முன்னர் போன்று காலத்தின் கலீஃபாவிடமிருந்தே ஒப்புதல் பெற வேண்டும்.

2. ஜமாஅத்தின் தலைவர் இந்தியாவுக்கு உள்ளே அல்லது இந்தியாவுக்கு வெளியே விடுப்பில் செல்லும்போது அவருக்கு பிரதிநிதிக்கான் ஒப்புதலை

நாஸிர் அஃலா அவர்கள் கொடுப்பார்கள். அதற்காக சம்பந்தப்பட்ட தலைவரின் செயற்குழுவிலுள்ள சில மூத்த உறுப்பினர்களின் பெயரையும் நாஸிர் அஃலா அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குறிப்பு: வட இந்திய ஜமாஅத்துகளுக்கு நாஸிர் அஃலா அவர்களும், தென்னிந்திய ஜமாஅத்துகளுக்கு அடிஷனல் நாஸிர் அஃலா ஜனூபீ ஹிந்து (தென்னிந்தியாவிற்கான கூடுதல் நாஸிர் அஃலா) அவர்களும் நடவடிக்கை மேற்கொள்வார்கள். (WTT-*3714/21.04.16)*

ஹுஸூர் அவர்களின் ஒப்புதலுடன் காதியானில் 70-க்கும் மேற்பட்ட மர்கஸீ கமிட்டிகள் (மேலிட குழுக்கள்) இருக்கின்றன. குறிப்பாக ஜமாஅத் சகோதரர்களுடன் தொடர்புடைய குழுக்களைப் பற்றி அமீர்மார்கள், தலைவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட சில குழுக்களைப் பற்றிய அறிமுகம் கீழே தரப்படுகிறது:

**1. மர்கஸீ தஃமீராத்தீ கமிட்டி (மேலிட கட்டடப் பணிக் குழு)**

இந்தக் குழு ஜமாஅத்துகளின் பள்ளிவாயில்கள், கொள்கை பரப்பு நிலையங்கள் (மிஷன் ஹவுஸ்கள்), கபர்ஸ்தான் ஆகிய விவகாரங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்கிறது. இந்தக் குழுவிற்கான தலைவர் மதிப்பிற்குரிய ஷீராஸ் அஹ்மது சாஹிப் ஆவார்கள்; நாஸிம் தஃமீராத் ஆகிய மதிப்பிற்குரிய அஹ்ஸன் கவ்ரீ சாஹிப் அவர்கள் இதன் செயலர் ஆவார்கள்.

**2. புயூத்துல் ஹம்து கமிட்டி (ஏழைகளுக்கு இல்லங்களை கட்டிக் கொடுக்கும் குழு)**

இந்தக் குழு உரிமையுடைய, ஏழைகள், வீடில்லாதவர்கள் ஆகிய நபர்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்கான, வீடுகளை சீரமைப்பதற்கான விண்ணப்பங்கள் வரும்போது அதற்கான நடவடிக்கையை எடுக்கிறது. இதற்கான தலைவர் மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் பைத்துல் மால் கர்ச் (செலவினங்களுக்கான நாஸிர் பைத்துல் மால்) ஆவார்கள். இதற்கான செயலர் மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் உமூரே ஆம்மா ஆவார்கள்.

### 3. கித்மத்தே கல்க் கமிட்டி (பொதுத்தொண்டுக் குழு)

இந்தக் குழு சிகிச்சை, தற்காலிக உதவி, உதவித் தொகை, திருமண உதவித் தொகை ஆகிய விண்ணப்பங்களின்படி நடவடிக்கை மேற்கொள்கிறது. இந்தக் குழுவிற்கான தலைவர் அடிஷனல் நாஸிர் அஃலா ஆகிய மதிப்பிற்குரிய ஷீராஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் ஆவார்கள். மேலும் மதிப்பிற்குரிய ரிஸ்வான் அஹ்மது மல்கானா அவர்கள் இதன் செயலர் ஆவார்கள்.

### 4. மர்கஸீ ஜாயிதாது கமிட்டி (மேலிட சொத்து குழு)

இந்தக் குழு ஜமாஅத்தின் எவ்விதமான சொத்தை வாங்குவது, விற்பது தொடர்பான விவகாரங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்கிறது. இந்தக் குழுவின் தலைவர் நாஸிர் பைத்துல் மால் கர்ச் ஆகிய மதிப்பிற்குரிய ஷுஐப் அஹ்மது சாஹிப் ஆவார்கள். நாஸிம் ஜாயிதாது ஆகிய மதிப்பிற்குரிய S.M. பஷீருத்தீன் சாஹிப் அவர்கள் இதன் செயலர் ஆவார்கள்.

### 5. மர்கஸீ பிரஸ் அன்டு மீடியா கமிட்டி (மேலிட பத்திரிகை மற்றும் ஊடகக் குழு)

இந்தக் குழு ஹுஸூர் அவர்களின் ஒப்புதலினால் பிரஸ் அன்டு மீடியா இலண்டன் சார்பாக வெளியிடப்படும் எல்லா ஜமாஅத் அளவிலான பிரஸ் ரிலீஸையும் இந்திய பத்திரிகைகளில் வெளியிடுகிறது. மேலும் முக்கியமான சந்தர்ப்பத்தில்ஏதாவதுபிரஸ்ரிலீஸ்இந்தியபத்திரிகைகளில் வெளியிடுவதற்கு அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கிறது. இந்தியாவில் பெரு நகரங்களிலுள்ள ஜமாஅத்துகளில் இதன் குழுக்களை உருவாக்குவது, பயிற்சி அளிப்பது, நாடுதழுவிய அளவிலான மாபெரும் பத்திரிகைகள், தொலைக்காட்சி நிலையங்களுடன் தொடர்பு கொள்வது ஆகிய விவகாரங்களில் இது வேலை செய்கிறது. இந்தக் குழுவின் தலைவர் மதிப்பிற்குரிய ஷீராஸ் அஹ்மது சாஹிப் ஆவார்கள். இதன் செயலர் மற்றும் இன்சார்ஜ் ஷுஅபா (துறையின் பொறுப்பாளர்) மதிப்பிற்குரிய K. தாரிக் அஹ்மது சாஹிப் ஆவார்கள்.

### 6. மர்கஸீ இஸ்லாஹீ கமிட்டி (மேலிட சீர்திருத்தக் குழு)

இந்தக் குழு தொழுகையை நிலைநாட்டுவது, ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஜுமுஆ குத்பாக்களை கேட்க வைப்பதை கண்காணிப்பது, சிறுவர், சிறுமியர்களை கடிதங்களின் மூலமாக கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் தொடர்பு கொள்ள வைப்பது, அவர்கள் வீணாக சுற்றித் திரிவதை கட்டுப்படுத்துவது, பொறுப்பாளர்கள் மக்களுக்கு அனுதாபம் காட்டுபவர்களாக மாறும் வகையில் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்குவது, குடும்ப சண்டைகளின் விவகாரங்களில் நடவடிக்கை எடுப்பது, ஜமாஅத்துகளில் நிலைபெற்றுள்ள சீர்திருத்தக் குழுவை கண்காணிப்பது ஆகியவை இந்தக் குழுவின் பணியாகும். இந்தக் குழுவின் தலைவர் மதிப்பிற்குரிய நாஸிர் அஃலா சாஹிப் அவர்கள் ஆவார்கள். செயலர் மதிப்பிற்குரிய நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா ஆவார்கள்.

### 7. ஆபாதீ கமிட்டி (குடிபெயர்ப்புக் குழு)

காதியானில் குடிபெயர்தலை அதிகமாக்குவதன் நோக்கத்திற்காக காதியானில் குடிபெயர்ந்து வரும் ஜமாஅத் உறுப்பினர்களுக்காக நிலத்தை வாங்குவது/வீடுகளை வாங்குவது தொடர்பான விண்ணப்பத்தின் மீது இந்தக் குழு நடவடிக்கை எடுக்கிறது. இந்தக் குழுவின் தலைவர் நாஸிர் உமூரே ஆம்மா ஆகிய மதிப்பிற்குரிய ஃபஸ்லுர் ரஹ்மான் பட்டி சாஹிப் ஆவார்கள். இதன் செயலர் நாஸிம் ஜாயிதாது மதிப்பிற்குரிய S.M. பஷீருத்தீன் சாஹிப் ஆவார்கள்.

### 8. தஃலீமீ கமிட்டி பராயே இம்தாது முஸ்தஹிக் துலபா (உரிமையுடைய மாணவர்களின் உதவிக்கான கல்விக் குழு)

இந்தக் குழு உரிமையுடைய மாணவர்களின் கல்வி உதவி தொடர்பாக பணி செய்கிறது. இந்தக் குழுவின் தலைவர் நாஸிர் தஃலீம் ஆகிய மதிப்பிற்குரிய ஷீராஸ் அஹ்மது சாஹிப் ஆவார்கள்.

**9. ஹியூமனிட்டி ஃபஸ்ட் கமிட்டி (மனிதம் முதலில் குழு)**

இந்தியாவில் வானம் மற்றும் பூமியில் ஏற்படும் ஆபத்துகளினால் துன்பத்திற்குள்ளாகும் அஹ்மதிகள் மற்றும் அஹ்மதி அல்லாத பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு மத்தியில் நிவாரணங்களை வழங்குவது. இந்தக் குழுவின் தலைவர் துணை நாஸிர் உமூரே ஆம்மா ஆகிய மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மத் பேக் சாஹிப் ஆவார்கள். மதிப்பிற்குரிய ஷமீம் அஹ்மது கவ்ரீ இதன் செயலர் ஆவார்கள்.

**10. பிரஸ் கமிட்டி தி'ஃபாயே இஸ்லாம் (இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்கான ஊடகக் குழு)**

இந்தக் குழுவின் பணி, பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் இஸ்லாத்திற்கு எதிராக வெளியிடப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல் கிடைத்த உடன் அதற்கான பதிலை ஆயத்தம் செய்து ஹுஸுர் அவர்களிடமிருந்து ஒப்புதலைப்பெறுவதும்அந்தபதிலைவெளியிடுவதற்காக பிரஸ் அன்டு மீடியா துறையிடம் (ஊடகத் துறையிடம்) ஒப்படைப்பதாகும். இந்தக் குழுவின் தலைவர் நாஸிர் நஷ்ரோ இஷாஅத் ஆகிய ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப் ஆவார்கள். இதன் செயலர் மதிப்பிற்குரிய முஜாஹிது ஷாஸ்திரி ஆவார்கள்.

**11. கமிட்டி பராயே கியாமே லைப்ரேரி (நூலகத்தை நிலைநாட்டுவதற்கான குழு)**

இந்தக் குழு இந்தியாவிலுள்ள ஜமாஅத்துகளில் நூலகங்களை நிலைநாட்டும் விஷயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்கிறது. இந்தக் குழுவின் தலைவர் நாஸிர் நஷ்ரோ இஷாஅத் ஆகிய ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப் ஆவார்கள்.

**12. கமிட்டி பராயே தன்ஸீப் M.T.A.Dish (M.T.A.Dish-ஐ பொருத்துவதற்கான குழு)**

இந்தக் குழு இந்தியாவிலுள்ள கொள்கை பரப்பு நிலையங்களில் (மிஷன் ஹவுஸ்களில்)/பள்ளிவாயில்களில்/ தொழும் மையங்களில்

ஜமாஅத்தின் அமைப்பின் கீழ் நிலைமைக்கேற்றவாறு M.T.A.Dish மற்றும் TV-க்கான ஏற்பாட்டை செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்கிறது. இந்தக் குழுவிற்கான தலைவர் நாஸிர் நஷ்ரோ இஷாஅத் ஆகிய ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப் ஆவார்கள். இதன் செயலர் சம்யீ பஸ்ரீ துறையின் இன்சார்ஜ் ஆகிய மதிப்பிற்குரிய K. தாரிக் அஹ்மது சாஹிப் ஆவார்கள்.

***        ***        ***